பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 09 | புதன்கிழமை | (25.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 250

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் கிழக்கு மாகாணப் படுகொலைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது!

## கண்காணிப்புக் குழு பேச்சாளர் ஜோன் ஒஸ்காஸ்

(நமது நிருபர்)

**அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதான முன்னெடுப்புகளுக்கு ஊக்க மளிக்காத வகையிலும், சமாதான பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையை கட்டி எழுப்பாத வகையிலும் கிழக்கிலங்கையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஜோன் ஒஸ்காஸ் சோன்ஸ் தெரிவித்துள்ளார்.**

முப்படைகளின் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், போர்நிறுத்த கண் காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோர் கிழக்கிலங்கைப் படுகொலைகள் திருகோ ணமலைத் துறைமுக முகாம் சர்ச்சை தொடர்பாக நேற்று சந்தித்து பேசிய பின் வழங்கிய விசேட பேட்டியிலேயே யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சா ளர் ஜோன் ஒஸ்காஸ் சோன்ஸ் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது,

நேற்று இடம்பெற்ற முத்தரப்பினருட னான சந்திப்பின் போது இரண்டு முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்தினோம். இப் பேச்சு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சிறையில் கைதிகளின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கூரை மீது ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் தம்மை விடு தலை செய்யுமாறு கோரியே போராட்டத் தில் ஈடுபட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெவ்டே - தமிழ்ச்செல்வன் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்ட் புறூவ் ஹெவ்டே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இன்று காலை இச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் காணப்பட்ட ரோலர் படகினை யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழு சோதனையிட முயன்றபோதும் அது கைகூடவில்லை. திருகோணமலை சம்பூர் கடற்பகுதியில் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக கடற்படை யினரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்று நீதிமன்றில் கைதி ஒருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் 10.40 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் விளக்கமறியல் கைதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கருணா அணியைச் சேர்ந்தவரான அருட்செல்வம் எனப்படும் பேரின்பம் ஜெயக்குமார் என்ற கைதியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் கடந்த மே மாதம் 19ந் திகதி ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவுடன்

## வவுனியா சிதம்பரபுரத்தில் மீண்டும் பரபரப்பு

# கண்காணிப்புக் குழுவுடன் நேற்று சிறில் ஹேரத் பேச்சு

## கிழக்கு நிலைமைகள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் முப்படைத் தளபதிகள் சகிதம் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரை நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின்போது அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் அங்கு காணப்படும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா சிதம்பரபுரத்தில் மீண்டும் பரபரப்பு

# இளம்பெண்ணின் எலும்புக்கூடு கழிவறையில் இருந்து மீட்பு

(வவுனியா)

வவுனியா சிதம்பரபுர்த்தில் மற்று மொரு மனித எலும்புக்கூடு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சிதம்பரபுரத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர்களுக்கான நலன்புரி நிலையத்தில் இருந்து 8 மாதங்களுக்கு முன்னதாகக் காணாமற்போனதாக கூறப்படும் பவானி செல்வம் (வயது 22) என்ற பெண்ணின் எலும்புக்கூடே கழிவறை குழி ஒன்றில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பாவனையற்ற பற்றைகள் அதிகமாக காணப்படும் கழி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஆயுதக் குழுக்களை பயன்படுத்தி

# புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கையை அரசு நிறுத்த வேண்டும்

## நோர்வே விசேட சமாதானத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தமிழ் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்துவதை உடன் நிறுத்தவேண்டும் என நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

உலக சமாதானத்திற்கான ஏற்பாட்டுக் குழுவினருக்கு விளக்கம் அளிக்கும் வகையில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே ஏற்பாட்டாளர் நிலையிலேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதுமட்டுமன்றி இலங்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மல்வத்தைபீட மகாநாயக்கர் தமிழ்ச்செல்வனை சந்திப்பார்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவதற்காக மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் திம்பிட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் வெகுவிரைவில் வன்னிக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்வத்தை மகாநாயக்கரை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இது குறித்து பேசப்பட்டுள்ளது.

இரண்டு தசாப்த காலமாக நிலவிவரும் இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளும், ஜே.வி.பியினரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் விரைவில் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்படும்

## ஜப்பானியத் தூதுவர் நம்பிக்கை தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தனக்கு நம்பிக்கை இருப்பதாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஜக்கியோ சூடா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிற்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் மேற்கொண்ட ஜப்பானியத் தூதுவர் ஜக்கியோ சூடா, பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவிடயம்குறித்து அவர் மேலும கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எவ்விதத்திலும் பாதிக்காது.

இச்சம்பவங்கள் குறித்து சர்வதேச சமூகம் கவலை கொண்டுள்ளது. அத்துடன், இச் சம்பவங்கள் எவ்வித காரணங்களுமின்றி உடனடியாக நிறுத்தப்படவேண்டியவையாகும்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு ஜப்பான் தனது பூரண ஆதரவை வழங்கும் எனக் குறிப்பிட்டார்.

அங்கு ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கருத்து வெளியிடுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதன் மூலமே படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும். விடுதல்லைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் அரசாங்கத்திற்கு வழங்கவேண்டும் என ஜப்பானியத் தூதுவரிடம் தான் வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமர திவாகரவும் கலந்து கொண்டார். (ந-121)

## யாழ்.வணிகர் கழகத்தின் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

## 27ஆம் திகதி முதல் 3 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகம் நடாத்தும் 2004 ஆம் ஆண்டிற்கான மாபெரும் வர்த்தகக் கண்காட்சியும், பொருட்கள் விற்பனையும், சேவைகள் வழங்கலும் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9.00 மணிதொடக்கம் இரவு 8.00 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி, யாழ். வணிகர் கழகத்தின் ஒன்றியத் தலைவர் சொ. வெற்றியரசன், யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் மு.சுந்தரலிங்கம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர், க.இராசதுரை, யாழ். மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், யாழ்.ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் தி.ஜெயராசசிங்கம், யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் ச.ரவீந்திரா மற்றும் யாழ்.செலான் வங்கி முகாமையாளர் கு.கனகசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்கு பற்றும் இம்மாபெரும் கண்காட்சியில், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனபிரமுகர்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றிப் பயன் பெறுமாறு யாழ். வணிகர்கழகம் கேட்டுள்ளது. (ந-7)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண். வடமேற்கு ஆறுகால் மடம் ஞானவைரவ சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (ந)

# பண்டாரவளை கொலைச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பண்டாரவளை புனாகலை ...

...மளவில் உள்ள நிலையில், இத் தொழிற் சங்கத்தின் பலத்தைக்...

...முன்னணியின் ஊவா மாநில பிரதான அமைப்பாளரும், ஊவா...

# செய்தித் துளிகள்

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(பொன்னாலை)

சங்கானை - சுன்றயல் கூறு அரசினர் வைத்தியசாலையில் கடந்த சில வாரங்களாக முக்கியமான மருந்துகள் மற்றும் கிளிக்குகளில் வழங்கப்படும் மருந்துகள் ஆகியவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களில் பெரும்பாலானோர் வெளி மருந்தகங்களிலேயே மருந்துகளைப் பெற்று வருகின்றனர்.

சமாதானகாலமான தற்போதைய காலத்திலும் பார்க்க யுத்த காலத்தில் ஓரளவு முழுமையான வைத்திய வசதியைப் பெறக் கூடியதாக இருந்தது என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ந-க,49)

## வரலட்சுமி விரதம்

(பொன்னாலை)

யாழ். வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

விசேட அபிடேக ஆராதனைகளுடன் அன்று காலை மகாலட்சுமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து 10.30 மணிக்கு உள்வீதியுலாவும் இடம்பெறும். அதன்பின வரதக்காப்பு வழங்கப்படும். (ந-க, 49)

## மேலதிக கொடுப்பனவு குறித்து எதுவிதமுடிவுமில்லை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளின் ஆய்வுகூடப் பரிசோதனை நிபுணர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குவதில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகால ஆலோசனைகளின் பின்னரே இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதில் பல சிக்கல் எழுந்திருப்பதாகவும் தெரியவருகிறது. (ந-ப)

## சிகிச்சை பெற்றனர்

(மருதங்கேணி)

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த ஜூலை மாதம் மருத்துவ நிலையங்களில் 20 ஆயிரத்து 157 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

ஐயங்குளத்தில் 2 ஆயிரத்து...

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை, அளவெட்டி, மல்லாகம் வயல்காக்கும் நாகதம்பிரான் ஆயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ந)

## அலங்கார உற்சவம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை மூன்றாம் பனை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்திம் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. (ந-க,49)

## மட்டு. ரயில்சேவை இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிற்கான சகல ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் பாதையில் நேற்றுமுன் தினம் ரயில் ஒன்று தடம் புரண்டதன் காரணமாகவே இவ் ரயில் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும், கொழும்பில் இருந்து பொலநறுவை வரையிலான ரயில் சேவை தொடர்ந்தும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ப)

## 'முனைப்புடன் எழு' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனியைச் சேர்ந்த திருமதி ரகுலா சிவநாதனின் "முனைப்புடன் எழு" புலம்பெயர் கவிதை நூல் வெளியீட்டுவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் மேற்கொள்ளவுள்ளார்.

ஆய்வுரையினை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஈ.குமரன் தமிழ் சிறப்புக் கலை இறுதிவருட மாணவன் இ.காண்டீபன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

(கொழும்பு)

பண்டாரவளை பூனாகலை தோட்டத்தின் தொழிற்சாலைப் பிரிவில் ஒரு வாரத்திற்கு முன்னர் இடம்பெற்ற கொலையின் பின்னணியில் அத் தோட்டத்தின் யு.எல்.ஜி. பிரிவை சேர்ந்த பலர் சம்பந்தப்பட்டிருபதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

உண்மையில் அப் பிரிவில் மலையகத் தொழிலாளர் முன்னணியின் அங்கத்தினர்கள் பெருமளவில் உள்ள நிலையில், இத் தொழிற் சங்கத்தின் பலத்தைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கோடு மலையகத் தொழிலாளர் முன்னணியின் குருப் கமிட்டி தலைவர் சங்கமருது சத்தியமூர்த்தி உட்பட பலரின் பெயர்கள் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் இவர்களைக் கைது செய்வதற்கான முயற்சிகளை எடுத்தனர்.

இவ் விடயம் மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாநில பிரதான அமைப்பாளரும், ஊவா மாகாணசபை உறுப்பினருமான அ.அரவிந் குமாரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, அவர் பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியசகர் எடிஸன் குணதிலக்கவை நேரில் சந்தித்து அங்குள்ள உண்மை நிலமையினை விளக்கிக் கூறினார்.

இதனைப் புரிந்து கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இவ்விடயத்தில் எவ்வித பாரபட்சமும் இன்றி நேர்மையான விசாரணைகளை மேற்கொள்வதோடு, எக்காரணத்தைக் கொண்டும் அப்பாவிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என உத்தரவாதம் அளித்தார்.

இதேவேளை, மாகாண சபை உறுப்பினர் அ.அரவிந்குமார், பண்டாரவளை கிறேக் தோட்ட ழேற் பிரிவில் இடம்பெற்ற பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இளைஞனின் கொலையை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலமையினைத் தணிக்கவும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும், போதிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ற)

# தமிழ் இலக்கிய விழா

# ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கிய விழா சம்பந்தமான முக்கிய கூட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு யாழ்.கல்வி வலயக கேட்போர் கூடத்தில் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் போது, தமிழ் இலக்கிய விழாவில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் பற்றி விளக்கப்பட்டதுடன் இந் நிகழ்விற்குப் பொறுப்பானவர்களை தெரிவு செய்தலும் இடம்பெற்றன.

அத்துடன், இந் நிகழ்வில் பங்கு பற்றுபவர்களுக்கான தங்குமிடம் உள்ளிட்ட ஏனைய வசதிகள் போன்றன ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், ப.விக்னேஸ்வரன், உதவிக்கலாசாரப் பணிப்பாளர் சிறிதேவி, பாடசாலை அதிபர்கள், உதவ! அரசாங்க அதிபர்க்ள் மற்றும் கலாசார உத்தியோகஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-5)

மாதம் மருத்துவ நிலையங்களில் 20 ஆயிரத்து 157 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

ஐயங்குளத்தில் 2 ஆயிரத்து 584 பேரும், கற்சிலைமடுவில் 2 ஆயிரத்து 206 பேரும், ஆழியவளையில் 2 ஆயிரத்து 59 பேரும், மாங்குளத்தில் 2ஆயிரத்து 110 பேரும், புங்குடுதீவில் ஆயிரத்து 839 பேரும், அளம்பிலில் ஆயிரத்து 761 பேரும், புளியங்குளத்தில் ஆயிரத்து 701 பேரும், பூநகரியில் ஆயிரத்து 343 பேரும், அடம்பனல் ஆயிரத்து 308 பேரும், பாட்டாளிபுரத்தில் 941 பேரும், கதிரவெளியில் ஆயிரத்து 787 பேரும், நைனாமடுவில் 526 பேரும் மொத்தமாக 20 ஆயிரத்து 157 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். (க,35)

## மைதானம் திறப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் மாவீரர் கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்த வித்தியாலய விளையாட்டு மைதான பெயர்ப்பலகை திரை நீக்கவிழாவும் மைதான திறப்பு விழாவும் கடந்த வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் பி.நவநீத மணி தலைமையில் நடைபெற்றது.

கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்த வித்தியாலய விளையாட்டு மைதானத்தை 4 இலட்சம் ரூபா செலவில் அவரின் உறவினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.(க-35)

வுள்ளனர். (ச)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

டனிஸ் டீ.மைனஸ் குருப் (டி.டி.ஜி) என்னும் மதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் இருந்து மல்லாகம் வரையான பிரதேசத்தில் உள்ள மதிவெடிகளை அகற்றவுள்ளனர்.

இந்த மதிவெடியகற்றும் பணியில் பணியாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் டி.டி.ஜி. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட விரும்புபவர்கள் தங்கள் சுயவிபர கோவை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு நிறுவனம் கோரியுள்ளது. (க,7,19)

## நீர்த் தாங்கி அமைப்பு

(மருதங்கேணி)

பச்சிலைப்பள்ளி பளை பிரதேச சபை பிரிவில் பளை நகர் பகுதியில் நீர்த் திட்டத்தின் கீழ் நீர்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

பளை பொதுச்சந்தைப் பகுதியில் மக்களின் குடிநீர் விநியோகத்திற்காக 25 இலட்சம் ரூபா செலவில் இந் நீர்த் தாங்கி அமைக்கப்பட்டுவருகிறது. (க,35)

## தடைசெய்யப்பட்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை செய்யப்பட்டுள்ள இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்கள் உடனடியாகப் பொலிஸாரால் அந்த இடங்களில் இருந்து அகற்றப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பான சுற்றுநிருபங்களை சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸார் இதனை செயற்படுத்த வேண்டும்.

அவ்வாறு தடைசெய்யப்பட்ட பகுதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களை அப்பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

அத்துடன் வாகனங்களைப் பெறவரும் வாகன உரிமையாளர்களிடம் தண்டப்பணத்தைப் பெற்ற பின்னரே வாகனங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் அந்தச் சுற்று நிருபத்தில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-க)

இந்துக்களை இந்துக்களாக வாழ அறைகூவி அழைப்பதற்காக . . .

CHINMAYA MISSION SRI LANKA

இலங்கை சின்மயா மிஷன் ஏற்பாட்டில்

'இந்து விழிப்பு வாரம்'

நல்லூர் தெற்கு வீதி, திறந்த வெளியில்
மாலை 7.00 மணிக்கு (புதிய நேரம்)

ஆன்மீகத் திரைப்பட விழா (பிரமாண்டமான திரையில்)

26.08.2004 (வியாழன்) -கந்தன் கருணை
27.08.2004 (வெள்ளி) -அகத்தியர்
28.08.2004 (சனி) -பாரதி

சனிக்கிழமையன்று மாலை 7.00 மணிக்கு 'இந்து விழிப்பு' வினாடிவினாப் போட்டியின் இறுதிச்சுற்று நிகழ்வு விழா மேடையில் சிறப்பாக நடைபெறும்.

இந்து விழிப்பு கலாசார விழா

29.08.2004 ஞாயிறு மாலை யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் மற்றும் யாழ்.பாடசாலை மாணவர்கள் பங்குகொள்ளும் பிரமாண்டமான கலைவிருந்து.

நாடகம்! நாட்டியம்!
வில்லிசை! இன்னும் பல...

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பர அனுசரணை:

கஜமுகன் காட்வெயர்ஸ்,
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-424)

விவாக அரங்கு -5

## நல்லைச் சூழலில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடாத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் 5ஆம் நாளான இன்று வி.வடிவாம்பிகையின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

அத்துடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நாவலர் மணிமண்டபத்தில் தினமும், இரவு 7 மணிக்கு நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்றும் தமிழக விரிவுரையாளர் சாண்டில்யன் இராமகிருஷ்ண மூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

மற்றும் இலங்கை சின்மயா மிஷன் ஆதரவில் நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8.30 மணி வரை "அன்பே வடிவாய் அமைந்த துறவி" என்ற மகுடத்தில் பிரமச்சாரி ரமணி சதைத்தன்யாவின் ஆன்மீகச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (க-7)

## புனரமைப்பும் நிர்வாக சபை தெரிவும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராம சேவை அலுவலர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

அத்துடன் வத்திராயன் கிராம அலுவலர் ந.பாலசுந்தரம் தலைமையில் வத்திராயன் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராக செ.ஸ்ரீ.இராமச்சந்திரனும், செயலாளராக த.யோகலிங்கமும், பொருளாளராக அ.சதீஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், 13 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (க-35)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடா

## நல்லூரான் திருவடிக்கு



ஐந்தாம் திருவிழா

### துயர் தீர்க்க

நல்லூரிலே உறைந்திடும்
நம்கடம்பா உன்னருளால்
நல்லடியார் துயர்தீர்க்க
ஏறிடவே வேண்டுமையா
மயில்மீது எந்நாளும்

என்.நெல்சன்.

### நற்கருணை புரிந்திடு

நல்லையில் குடியிருக்கும் முருகா
நாடிவந்தோர் துயர் தீர்த்திடு குமரா
நாட்டில் சமாதானம் மலர்ந்திட வேலவா
நற் கருணை புரிந்திடு கடம்பா!

நாகமணி மகேந்திரலிங்கம்.

### வணக்கங்கள்

முருகனைப் பாடிடுவோம் - நல்லூர்
குமரனைப் பணிந்திடுவோம்
துயரின்றி அருள் செய்யும் - வடி
வேலனைத் துதி செய்வோம்

கந்தனைப் போற்றிடுவோம் - ஆறு
முகனடியை வணங்கிடுவோம்
சந்தமுடன் அவன் புகழை
நெஞ்சினாலே நினைந்திடுவோம்!

ஜெ.சுபாஷினி.

# விவாத அரங்கு -5

விடயம்

வீடியோப் படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றது.....

பாதுகாக்கின்றது.....

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன் (பிரபலசட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழா வும், 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா வும் நடைபெறவுள்ளது. (7)

# கட்டிடம் அமைக்க நிக்கொட் நிதியுதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆழிய வளை சீ.ச.த.க. பாடசாலைக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு நிக்கொட் நிறுவனம் 70 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மூன்று கட்டிடங்கள் இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பாடசாலையில் இதுவரை காலமும் இடவசதியின்மையால் மாணவர்கள் மரநிழலில் இருந்து கற்று வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-35)

ஜெ. சுபாஷினி.

# நல்லபதம் தருவாய்!

வண்ணத் திருவடி எண்ணத்திலே வைத்து
வாழ்த்த வரம் தருவாய்! முருகா
பாழ்த்த பகை அறுப்பாய்!

முத்துக் குமரனே! முந்தை வினையெல்லாம்
முடிய உன்வேலெடுப்பாய்! - முருகா
அடியர் குறை கெடுப்பாய்!

குறிஞ்சி நிலத்திடை கொற்றம் உடையவன்
அறிஞர் புகழ்கடந்தாய் - முருகா
வறிஞர் இகழ் கெடுப்பாய்!

அம்மை உமையவள் அன்பிற்குரியனே
எம்மை உடைமை கொள்வாய் - சிறு
புன்மை உடைத்தெறிவாய்!

நல்லைக் குமரனே! நம்பிக்கைக்குரியனே!
அல்லல் அகற்றிடுவாய்! எமக்குன்
நல்ல பதம்தருவாய்!

-நிவேதிதா-

# ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப்போட்டி யூலியா, ஜக்குலின், தங்கம் வென்றனர்

ஒலிம்பிக் போட்டிகளில் அனைவராலும் மிகவும் விரும்பி ரசிக்கப்படும் போட்டி நிகழ்ச்சிகளாக ஆண்க்ள், பெண்களுக்கான 100மீற்றர் ஓட்டப்போட்டிகள் அமைகின்றன.

இம்முறை பெண்களுக்கான 100மீற்றர் ஓட்ட நிகழ்வில், உலக அரங்கில் அதிகம் அறியப்படாதவரான பெலாரஸ் வீராங்கனை யூலியா நெச்சரன்ஹோ தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவர் 100மீற்றர் தூரத்தை 10.93செக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். இப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை லொறின் வில்லியம்ஸ் வெள்ளிப் பதக்கத்தையும், ஜமெங்சா வீராங்கனை வெரோனிக்கா ஹம்பெல் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்காவின் ஜஸ்டின் ஜக்குலின் 9.85செக்கன்களில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தையும், போத்துக்கலின் பிரான்ஸிஸ் வெள்ளிப்பதக்கத்தையும் தற்போதைய சம்பியனான மெரிஸ் கிறீன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். (ற-7)

# 559 கிலோ மீற்றர் தொடர்ந்து ஓடி உலக சாதனை படைத்தார் சுரேஷ்

இலங்கையைச் சேர்ந்த கின்னஸ் சாதனையாளர் சுரேஸ் ஜோக்கிம் மேலும் ஒரு கின்னஸ் சாதனையை ஏற்படுத்தி இருக்கிறார்.

ஓடும்போது இதயத்துடிப்பை அளக்க உதவும் 'டிரம்பில்' என்ற சாதனத்தில் தொடர்ந்து 1வாரம் ஓடி இச்சாதனையை இவர் ஏற்படுத்தி இருக்கிறார்.

தமிழரான சுரேஷ், 168மணித்தியாலங்களில் 559.27கிலோ மீற்றர் தூரத்தை இச்சாதனத்தில் ஓடியிருக்கிறார்.

இதற்கு முன் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் ரெயிலர் 455.83 கிலோ மீற்றர் தூரத்தை ஓடியமையே கின்னஸ் சாதனையாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

மேலும் சுரேஷ் ஜோக்கிம் இச் சாதனையுடன் இதுவரை மொத்தம் 27சாதனைகளை நிகழ்த்தியுள்ளதும் அவற்றில் 5உலக சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சுரேஸ் ஜோக்கிம் மேலும் பல சாதனைகளைப் புரிய ஆயத்தம்செய்து வருவதாக ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார். (ற-7)

# இந்தியா-ஆஸிக்குமிடையிலான போட்டி கடும் மழையினால் கைவிடப்பட்டது

நெதர்லாந்தின் ஆம்டஸ்டாம் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒருநாள் முத்தரப்புக் கிரிக்கெற் போட்டிகளில் இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையேயான போட்டி நேற்று முன்தினம் கடும் மழைகாரணமாகக் கைவிடப்பட்டது.

இலோசான மழை காரணமாக 32ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இப் போட்டி, 5மணிநேர தாமதத்திற்குப் பின்னரே ஆரம்பமானது.

பூவா, தலை போட்டுப்பார்த்ததில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. 31.4ஓவர்களில் 7 விக்கெற்றுக்களை இழந்து 175ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றவேளை, மீண்டும் மழைபெய்யத் தொடங்கியது.

இதனையடுத்து ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா 3புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன. (ற-7)

# கென்ய வீரர் உடும்பேக்கு 5 வருடகால ஆட்டத்தடை

கென்ய வீரர் மொரிஸ் உடும்பேவுக்கு சர்வதேச கிரிக்கெற் சம்மேனம் 5வருடகால ஆட்டத்தடை விதித்துள்ளது.

கிரிக்கெற விளையாட்டில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக மொரிஸ் உடும்பே மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் குற்றஞ்சாட்டினை விசாரித்த முன்னாள் சிம்பாப்வே உயர் நீதிமன்ற நீதிபதி அஹமத் இப்றாகீம், சர்வதேச கிரிக்கெற் சபையின் சட்டவிதிகளுக்கு முரணாக மொரிஸ் உடும்பே செயற்பட்டதாகத் தீர்ப்பளித்ததுடன், இவருக்கு 5வருடகால ஆட்டத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## அமெரிக்க அதிபரின் பிரசாரத் தந்திரம்

எதென்ஸில் நடைபெற்றுக் கொண்டிக்கும் 28ஆவது ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் ஈராக் கால்பந்தாட்ட அணியை சுதந்திரத்தின் சின்னமாகக் கருதவேண்டாமென அதன் பயிற்றுவிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய, ஆப்கானிஸ்தான் கொடிகள் ஒலிமபிக் அரங்கில் பறப்பதை தமது தேர்தல் விளம்பரமாக அமெரிக்கத் தலைவர் புஷ் பயன்படுத்திருப்பது பற்றி அவர் கருத்துத் தெரிவித்தார்.




| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 23 | 26 | 17 | 66 |
| சீனா | 23 | 15 | 12 | 50 |
| ஜப்பான் | 15 | 08 | 09 | 32 |
| அவுஸ்திரேலியா | 13 | 09 | 13 | 35 |
| பிரான்ஸ் | 09 | 07 | 09 | 25 |




# ஒலிம்பிக் இன்று 13ஆம் நாள்

# படையினரால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெற் போட்டிகள்





இந்தக் குற்றஞ்சாட்டினை விசாரித்த முன்னாள் சிம்பாப்வே உயர் நீதிமன்ற நீதிபதி அஹமத் இப்றாகீம், சர்வதேச கிரிக்கெற் சபையின் சட்டவிதிகளுக்கு முரணாக மொரிஸ் உடும்பே செயற்பட்டதாகத் தீர்ப்பளித்ததுடன், இவருக்கு 5வருடகால ஆட்டத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டினை மறுத்துள்ள மொரிஸ் உடும்பே, இந்த ஆட்டத்தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ற)

## பெண்ணாக தங்கம் வென்ற செலா வோல்ஸ் ஒரு ஆணே!

28ஆவது ஒலிம்பிக் போட்டிகள் தற்போது எதென்ஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

10ஆவது ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சலீஸ் நகரில் நடைபெற்றது.

இப்போட்டியானது ஒரு நவீன ஒலிம்பிக் போட்டியென வர்ணிக்கப்பட்டது. இப் போட்டியில் தான் முதன்முதலில் ஒலிம்பிக் கிராமம் உருவாக்கப்பட்டது. போட்டியாளர்கள் சம்பந்தப்பட்ட மைதானங்களுககுச் செல்வதற்கான விசேட வீதிகள் அமைக்கப்பட்டதும் இந்த ஒலிம்பிக்கில்தான்.

அக் காலகட்டத்தில் அமெரிக்காவின் அதிவேக ஓட்ட வீராங்கனை எனப் பெயர்பெற்ற செலா வோல்ஸ் உளளூர்ப் போட்டிகளில் 100மீற்றர் ஓட்டப்போட்டிகளில் பல புதிய சாதனைகளை ஏற்படுத்தியதோடு, இந்தமுறை ஒலிம்பிக் போட்டியிலும் இவர் 100மீற்றர் ஓட்டப்போட்டியில் புதிய சாதனையை ஏற்படுத்தித் தங்கப பதக்கத்தைப் பெற்றார்.

இந்த ஒலிம்பிக் போட்டிகளின்பின், ஓட்டப்போட்டிகளில் பங்குபற்றுவதை முற்றாக நிறுத்தி விட்டார் வோல்ஸ்.

இவர் ஓய்வு பெற்றுக் கிட்டத்தட்ட 48வருடங்களின் பின், அதாவது 1980ஆம் ஆண்டு ஒரு கோஷ்டி மோதலில் சிக்குண்டு அதேஇடத்தில் இவர் மரணமானார்.

இவரது சடலத்தை பிரதேப் பரிசோதனை செய்தபோது அனைவருக்கும மிகப்பொிய அதிர்ச்சி காத்திருந்தது. நீண்டகாலமாக மறைக்கப்பட்ட உண்மையும் தெரியவந்தது.

இத்தனை காலமும் பெண்ணாக நடமாடிய செலா வோல்ஸ் பெண்ணல்ல ஒரு ஆண் என்பதே அந்த அதிர்ச்சிதரும் விடயமாகும்.

(ற-7)

பதை தமது தேர்தல் விளம்பரமாக அமெரிக்கத் தலைவர் புஷ் பயன்படுத்திருப்பது பற்றி அவர் கருத்துத் தெரிவித்தார்.

ஜோர்ஜ் புஷ்ஷின் விளம்பரத்தில் பறக்கும் கொடிகளின் பின்னணியில் ஒரு குரல் ஒலிக்கிறது இந்த ஒலிம்பிக்கில் “விடுதலையான இரண்டு தேசங்கள் சேருகின்றன. பயங்கரவாத அரசுகள் குறைகின்றன” என்ற வாகசகம் உச்சரிக்கப்படுகின்றது.

ஆனால் தமது நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் கடுமையை எதிர்கொள்வதாக ஈராக்கிய பயிற்றுவிப்பாளர் கூறினார்.

ஈராக்கிய கால்பந்தாட்ட அணி அரையிறுதிவரை முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-07)

## ஒலிம்பிக்கில் இன்று...

கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸில் நடைபெற்றுவரும் 2004 ஒலிம்பிக் போட்டியின்பதின் மூன்றாம் நாளான இன்று.

தடகளப்போட்டிகள், பேஸ்போல், கூடைப்பந்து கரபந்தாட்டம் (கடற்கரை) குத்துச்சண்டை, படகோட்டப் போட்டிகள், சைக்கிள் ஓட்டம், நீச்சல் சாகசம், குதியேற்றம் ஹொக்கி, நீச்சல், டெத்வன்டோ, ட்ரைதலோன், கரபந்தாட்டம், வோட்டர் போலோ, மல்யுத்தம் என்பன நடைபெறவுள்ளன.

(ற-7)



யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 51ஆவது சேனையகத்தின் வழிகாட்டல்களுக்கமைய 513வது படையணியினரால் யாழ்.மக்களிடையே இனப்புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக மென்பந்து கிரிக்கெற் போட்டிகள் நடாத்தப்பட்டன.

வலிகாமம் பகுதியில் இருந்து 12 அணியினரும் இராணுவத் தரப்பில் இரண்டு அணியினரும் பொலிஸ் தரப்பில் இருந்து ஒரு அணியுமாக மொத்தம் 15அணியினருக்கிடையே இந்தக் கிரிக்கெற் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இந்தக் கிரிக்கெற் அணியினருக்கிடையே இடம் பெற்ற போட்டிகளின இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ள சுன்னாகம் தோழர்கள் அணியினரும் ஆனைக்கோட்டை யூனியன் கழகத்தினரும் தெரிவுசெய்யப்பட்டு, இதற்கான இறுதி ஆட்டம் கடந்த 21ஆம் திகதி காலை மானிப்பாய் இந்து வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த மென்பந்துக் கிரிக்கெற் போட்டிகள் கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 21ஆம் திகதிவரை இடம்பெற்றதுடன், நேற்றைய போட்டிகளுக்காக 25ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் போட்டிகள் நடாத்தப்பட்டன.

இந்தப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்குப் பரிசுக் கேடயங்களை யானைமார்க் விற்பனை நிறுவனத்தினரே வழங்கினர். இந்த இறுதிப் போட்டியில் கலந்துகொண்டு முதலாம் இடத்தைப் பெற்ற யூனியன் கிரிக்கெற் கழகத்தினருக்கு 15ஆயிரம் ரூபா ரொக்கப் பணப்பரிசும் தோழர்கள் கழகத்தினருக்கு 7ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பணப்பரிசும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியால் வழங்கப்பட்டன.

இநநிகழ்வில், 51வது சேனையகத் தளபதி மேஜர் ஜெனரல் ரீயூபி எதிரிசிங்க, 512, 513, 514 ஆகிய படையணியின் கட்டளையிடும் அதிகாரிகள், பலாலி விமானநிலையக் கட்டளையிடும் அதிகாரி விங்க மாண்டர் எல் கொடிப்பிலி மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், மானிப்பாய் இந்து வித்தியாலய அதிபர் கே.ஜெகநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

# பொருளாதார உலக மயமாக்கல் எனும் செயற்பாடு

## பெண்களின் சகல வளர்ச்சிகளுக்கும் பின்னடைவானதே!

முழு உலகத்துக்குமான ஒற்றைச் சந்தை முறையினை அடிப்படையாகக் கொண்டு, தேசிய ரீதியான வர்த்தகத் தடைகள் நீக்கப்பட்டு, தேசிய பொருளாதாரத்தை உலக சந்தையுடன் இணைக்கும் முதலாளித்துவ பொருளாதாரம் உலகளாவிய ரீதியில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இந்நவீன பொருளாதார கொள்கையானது உலக மயமாக்கல் என்றழைக் கப்படுகின்றது. மூலதனத்தைப் போன்று மனித உழைப்பும் பல்வேறு நாடுகளிடையே அசையத் தொடங்கியுள்ளது.

இதன் உள்நோக்கம் யாதெனில், செல்வந்த நாடுகளும் வளர்முக நாடுகளும் தடையற்ற சுதந்திர மான வர்த்தகச் சந்தையினை ஏற்படுத்திக்கொள்வதேயாகும். தடையற்ற இச் சந்தை முறை யானது பல்தேசியக் கம்பனி களூடாகவே வறிய மற்றும் வளர்முக நாடுகள் மீது திணிக் கப்பட்டு வருகின்றன. இது வர்த்தகத்தை மேற்கொள்ள சுதந்திரமான வர்த்தக சந்தை முறையாக இருந்த போதிலும், வறிய வளர்முக நாடுகள் செல் வந்த நாடுகளுடன் போட்டியிட்டு வெல்ல முடியாத நிலையினைத் தோற்றுவித்துள்ளது. ஏனெனில் வளர்ச்சியுற்ற நாடுகளே முதலீடு செய்யும் வல்லமையினை கொண்டுள்ள மையினால் மீள் முதலீடு செய்தலை தீர்மானிக் கும் அதிகார சக்தி செல்வந்த நாடுகளுக்கே உள்ளது.

இந் நிலையானது நாடு க்ளுக்கிடையிலான, மக்களுக் கிடையிலான சமனற்ற வர்த்தக உறவு முறையில் பாரிய இடைவெளியை நிலை நிறுத் திக் கொள்கின்றது. செல்வந்த நாடுகள் வறிய மற்றும் வளர்முக நாடுகளை நாடு என நோக்கு வதற்கு மாறாக ஒரு கட்டுப்பா டற்ற சந்தையாக நோக்குவத னால் உலக மயமாக்களின் உச்சப் பயனை செல்வந்த நாடுகளாலேயே அடையமுடி கின்றது. வாறிய, வளர்முக நாடுகளோ ஏற்றத்தாழ்வுகள், தங்கியிருந்தல் என்ற நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளன. இவ் வாறு ஏழைகளைச் சுரண்டி தனவந்தர்களுக்குச் சாதகமான சொத்துக்களை (மூலதனத்தை) குவிப்பதனால் பல இலட்சக் கணக்கான மக்கள் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். எழை மேலும் ஏழையாகின்றான். ஏழை- பணக் காரன் என்ற பிரிவு நாடுகளுக் கிடையேயும் மக்களுக்கிடை யேயும் நாளுக்கு நாள் அதிகரித் துச் செல்கின்றன. செல்வந்தர் களுக்கு லாபத்தைக் குவிக்கும் முறையில் அமைந்துள்ள இம் முதலாளித்துவவாதிகளில் பொருளாதார முறையில் பெண் கள் அதிகமான பாதிப்பிற்குள் ளாகும் பிரிவினராக உள்ளமை யினால் உலக ரீதியாகப் பெண் கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள நிலையினை ஆராய்வோமாயின்,

முதலாளித்துவ பொருளா தார கட்டமைப்பிலே பெண்கள் மீதான உழைப்புச் சுரண்டல் ஆக்கிரமித்திருந்த போதிலும் நவ பொருளாதாரமுறை ஆக்கிரமிப்பின் பின்னர் அது உச்சக்கட்டத்தை அடைந் துள்ளது.

ஏனெனில் உலகமய மாக் கல் செல்நெறிகையினால் தற் போது சகல தொழிற்துறை களும் பெண்ணியமாக்கப்பட் டுள்ளன. இதன் விளைவால் பெண்களின் சமூக, பொருளா தார வளர்ச்சி மேலும் பின்னடைவை நோக்கி நகர்த் தப்பட்டுள்ளது.

உழைப்புச்சுரண்டல், இரவு நேரவேலை, ஓய்வின்மை, வேலைப்பளு, சட்டங்களை மீறிய கட்டளைகள் எனப் பல அநீதிகளைப் பெண்கள் எதிர் கொண்டுள்ளனர். மேலும் பல தொழிற்சாலைகளில் தொழிலாளப்பெண்கள் தொழில்சார் உரிமையினை இழந்துள்ளனர். எவ்வித முன் நிபந்தனைகளுமின்றி பல தொழிற்சாலைகள் மூடப்படு கின்றன. இந்நிலை தொழில் பாதுகாப்பு, தொழில் உத்தர வாதம் என்பவற்றை முறியடித் துள்ளது. மறுபுறம் உலகமய மாக்கலின் விளைவாக அதிக ரித்துள்ள வறுமை காரணமாக தமதும் தமது குடும்பத்தினர தும் பட்டினியைத் தீர்ப்பதற் காகப் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பெண்களின் உழைப்பு நாடுவிட்டு நாடு அசையத் தொடங்கியுள்ளது.

உலகமயமாக்கல் எனும் புதிய பொருளாதார முறை அமுலாக்கம் ஏற்படுத்தியுள்ள இது போன்ற பாதிப்புக்களை, சுரண்டல்களை எதிர்க்கும் வகையில் பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள் மற்றும் தொழிலாளர் கள் தத்தமது நாடுகளில் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, பிராந்திய ரீதியாகவும், உலக ரீதியாகவும் பல போராட்டங் களை மேற்கொண்டு வருகின் றமை இன்று பரவலாகக்காணப் படுகின்றது. இச் செயற்பாடுக ளின் ஒரு நடவடிக்கையாக உலகின் பல நாடுகளைச்சார்ந்த தொழிற்சங்க வாதிகள் புத்தி ஜீவிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் சிலர் 2001 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டின் போர்ட் அல்கேரி நகரில் ஒன்று கூடி 'இன்னொரு உலகம் அவசியம்' எனும் தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்டு 'உலக சமூக மாமன்றம்' என்ற மாநாட்டினை நடத்தினர்.

இம் முதற்கட்ட நடவடிக்கை யின் போது, 2004 ஜனவரி மாதம் மும்பாய் லொனவலாவில் கண்டி - சமூக அபிவிருத்தி நிறுவகம், புதுடில்லி சீ.ஈ.சி. டிரேட் கிராப்ட் ஆகிய அமைப் புக்கள் கூட்டாக இணைந்து 'உலக மயமாக் கலும் தேயிலைத் தோட்டத் தொழிலா ளர்கள் மீதான அதன் தாக்க மும்' எனும் தலைப்பிலான செயல் மர்வினை நடாத்தினர்.

இச்செயலமர்வில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், கென்யா, டன்சானியா ஆகிய நாடுகளின் தொழிற்சங்க தலை வர்களும் அரச, அரசசார் பற்ற நிறுவனங்களும், பிரமுகர்களும் பங்கு பற்றினர். இதில் தேயி லைத்தோட்டத் தொழிலாளர் களின் பிரச்சினைகளை சர்வ தேச மட்டத்தில் ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் 'சர்வதேச தேயிலைத் தினத்தை' பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது. மேலும் மேலும் தோட்டங்களை அரசு நிர்வகித்த காலம் முதல் இன்று வரை தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற தோட்டத் தொழி லாளர்கள் குறைந்த சம்பளம் பெறுபவர்களாகவே உள்ளனர்.

இத் தொழிலாளர்களுக்கு அன்று முதல் இன்று வரை உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. நிர்வாகத் தினால் இவர்கள் பலவாறு ஏமாற்றப்படுகின்றனர். இவ்வாறு அடிமையாக நடத்தப்படுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையானது தோட்டங்கள் தனி யார் மயப்படுத்தப்பட்ட பின்னர் மேலும் மோசமடைந்துள்ளன.

அதிலும் குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் மீதான சுரண்டல் நாளுக்குநாள் அதிகரித்தே செல்கின்றது. ஞாயிறு உட்பட விடுமுறை தினங்களில் ஏனைய நாட்களில் பெயருக்கு எடுக்கும் கொளுந்து கிலோக்கணக்கே எடுக்கவேண் டும் எனச் சட்டம் கூறினாலும் நடைமுறையில் அத்தினங்களில்

**கி.யோகேஸ்வரி**

ஒன்றரைநாள் சம்பளம் ஏனைய தினங்களை விட அதிகமான கிலோ கொளுந்து எடுக்குபடி தொழிலாளர்கள் நிற்பந்திக்கப படுகின்றனர். தோட்ட நிர்வாகம் ஆண்களை புதிதாக வேலைக் குச் சேர்த்துக் கொள்வதில்லை.

இந்த ஆட்குறைப்புக் காரண மாகப் பெண்களையே நிரந்தர தொழிலாளர்களாக வைத்துக் கொள்கின்றனர். ஏனெனில் பெண்கள்போராட்டம் ஏதுமின்றி அமைதியாக வேலைசெய்து அதிகம் உழைத்துக் கொடுப்பவர்களாகவே உள்ளனர்.

*(நன்றி தமிழ் உலகம்)*

---

# ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு ஆவணங்களை கையளிக்க உத்தரவு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயல லிதாவுக்கு எதிரான சொத்துக்



குவிப்பு வழக்கு தொடர்பான ஆவணங்களை கர்நாடக சிறப்பு நீதிமன்றத்திடம் ஒருவாரத்துக்குள் ஒப்படைக்க வேணடுமென்று தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை தனி நீதிமன்றத்தில் ஜெயலலிதா உள்ளிட்டோருக்கு எதிராக நடந்துவந்த சொத்துக் குவிப்பு விசாரணையை கர்நாடக மாநிலத்துக்கு மாற்றி உச்சநீதி மன்றம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உத்தரவிட்டது.

கர்நாடக அரசு சிறப்பு நீதிமன் றத்தை அமைத்த போதிலும் வழக்கு தொடர்பான ஆவணங்களைத் தமிழக அரசு கர்நாடக நீதிமன்றத் துக்கு அனுப்பவில்லை.

இது தொடர்பாக தி.மு.க. பொதுச செயலாளர் அன்பழகன் தாக்கல் செய்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வரியவா, ஹேமா ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது, ஜெயலலிதாவுக்கு எதிராக சொத்துக் குவிப்பு வழக்குத் தொடர் பான ஆவணங்களை கர்நாடகச் சிறப்பு நீதிமன்றம் அனுப்பும் மூத்த அதிகாரியிடம் ஒரு வாரகாலத் துக்குள் ஒப்படைக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தர விட்டுள்ளது.

ஆவணங்களைக் கொண்டு செல்ல தமிழக, கர்நாடக அரசுகள் உரிய பொலிஸ் பாதுகாப்பு அளிக்க வேணடுமென்றும் நீதிபதிகள் தமது உத்தரவில் கூறியுள்ளனர். (து)

# மத்திய பிரதேச முதலமைச்சர்

# உமாபாரதி இராஜிநாமா

கர்நாடக நீதிமன்றத்தால் கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட மத்திய பிரதேச முதலமைச்சர் உமாபாரதி அம்மாநில ஆளுநர் பலராம் ஜாக்கரை நேற்றுமுன்தினம் சந்தித்துத் தமது இராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாகப் புதிய முதல மைச்சராக பாபுலால் கவுண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கர்நாடக மாநிலம் டுப்ளியில் கடந்த 1994 ஆம் ஆண்டு நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5பேர் கொல் லப்பட்டதான வழக்கில் மத்தியப் பிரதேச முதலமைச்சர் உமா பாரதிக்கு எதிராக டுப்ளி நீதி மன்றம் கடந்த வாரம் கைது வாரண்ட் பிறப்பித்தது. உடனே அவரைக் கைது செய்யக் கர்நாட கப் பொலிஸார் போபால் சென்ற தையடுத்து உமாபாரதி முதல மைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ய டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாரதிய ஜனதா நிர்வாகிகள் கூட்டத்தில் அனுமதி தரப்பட்டது. இதையடுத்து அவர் மத்திய பிரதேச ஆளுநரிடம் தமது இராஜிநாமாக் கடிதத்தைக் கையளித்தார். (து)

# இந்தியச் செய்திகள்


# அ.தி.மு.க. ஆட்சியை மக்களே கலைத்து விடுவார்கள்

அ.தி.மு.க. ஆட்சியை 356 ஆவது சட்டப் பிரிவைப் பயன் படுத்திக் கலைக்கத் தேவையில் லையென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

பல இலட்சம் பேர் திரண்டி ருந்த சேலம் தி.மு.க. சிறப்பு மகா நாட்டில் உரையாற்றிய அவர் அ.தி.மு.க. அரசின் செயற்பாடுகள் மக்களிடையே பெரும் எதிர்ப்பை உருவாக்கியிருப்பதாகத் தெரி வித்தார். அதனால் மக்களே இந்த ஆட்சியை கலத்துவிடுவார்கள் என்றும் அவர் கூறினார்.

சேலத்தில் இரண்டு நாள் நடை பெற்ற தி.மு.க.சிறப்பு மகாநாட்டில் பல இலட்சம் பேர் முன்னிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுமுன்தினம் உரையாற்றிய போது அ.தி.மு.க. அரசின் செயற் பாடுகள் மக்களிடையே பெரும் எதிர்ப்பை உருவாக்கியிருப்பதால் தமிழகத்துக்கு எப்போது வேண்டு மானாலும் தேர்தல் வரலாம் என் றார். அதற்கு மக்களை ஜனநாயக ரீதியில் தயார்ப்படுத்த இப்போதி லிருந்தே பணிகளைத் தொடங்க வேண்டுமென்று அவர் கூறினார்.

அமைச்சர்கள் மீது கைது வாரண்ட் பிறப்பிக்கப்படுவது பற் றிக் குறிப்பிட்ட கருணாநிதி, வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட ஒரே காரணத்துக்காக எந்த அமைச் சரும் பதவி விலகவேண்டியதில்லை என்று கூறினார். யார் மீது வழக்குத் தொடுத்தாலும் குற்றம் நிருபண மாகி தண்டனை கிடைத்தால் தான் அமைச்சராக முடியாது என்ற நிலை ஏற்படவேண்டுமென் றும் அவர் தெரிவித்தார்.



மக்களவைத் தேர்தலில் ஏற் பட்ட தோல்வியை பா.ஜ.க.வினர் இன்னமும் ஏற்றுக்கொள்ள முடி யாமல், நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் அமளியில் ஈடுபடுகிறார் கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டி னார். (து)

# மதுக்கடைப் போராட்டத்தில் ராமதாஸ் கைதாகி விடுதலை


அரசு மதுக்கடைகளுக்குப் பூட்டுப் போடமுயன்ற பா.ம.க. நிறு வுநர் டாக்டர் ராமதாஸ் கைது செய்யப்பட்டார்.

கிராமப் புறங்களில் தமிழக அரசு நடத்திவரும் டாஸ்மா மதுக் கடைகளை மூடவலியுறுத்தி அந்தக் கடைகளுக்குப் பூட்டுப் போடும் போராட்டம் பா.ம.க.மகளி ரணி சார்பில் மாநிலம் முழுவதும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திண்டிவனமருகே கொந்தவூர் என்ற கிராமத்தில் டாஸ்மா மதுக் கடைகளுக்கு நேற்றுமுன்தினம் பூட்டுப்போடச் சென்ற போது டாக்டர் ராமதாஸூம் ஏராளமான பெண் களும் கைது செய்யப்பட்டனர்.

இதன்பிறகு செய்தியாளர்களுக குப் பேட்டியளித்த ராமதாஸ் மதுக் கடைகளை மூடாவிட்டால் போராட் டத்தைத் தீவிரப்படுத்தப் போவதா கத் தெரிவித்தார்.

இந் நிலையில் தி.மு.க.தலை வர் கருணாநிதி விடுத்துள்ள அறிக்கையில் டாக்டர் ராமதாஸ் முதலியோர் கைது செய்யப்பட்டதற் குக் கண்டனம் தெரிவித்துள்ளார். (து)



# வியாழ மாற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

## கன்னி



**24.03.2005 முதல் 07.05.2005 வரை**

இப்போது ஜன்ம குருதான் சில வழிகளில் சிந்திக்க விடாமல் தொடர்ச்சியாக முக்கிய வேலைகளைப் பாதிக்கச் செய்யும். ஆட்களுடன் பழகுவதிலும் ஆண்கள், பெண்களுடன் பழகுவதிலும் முன்யோசனை தேவை. அவதூறு வார்த்தைகள் இடம்பெறலாம். இதன் மூலம் குடும்பத்திலும் குழப்பம் உருவாக வாய்ப்பு இருக்கிறது. விசேடங்களில கலந்துகொள்ளும் போது வாய்ப்பேச்சு வம்பை வளர்க்கலாம் எச்சரிக்கை. குழந்தைகள் ஆரோக்கியம் சம்பந்தமான மருத்துவர்களைச் சந்திப்பது, செலவுகளும் இடம்பெறும். கணவன் ,மனைவி

கட்டிடம் கட்டும் செலவு உண்டாகும். கணவன, மனைவி உறவு கனிவு கொண்டதாக இருக்கும். சிலர் இப்போது வெளிநாட்டுப் பிரயாணம் மேற்கொள் வதும் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் சம்பந்தமாக மருத்துவமனை சென்று வருதலும் அவசியமாகும். காது போன்ற அங்கங்களில் உங்களுக்கு பாதிப்புத் தரவும் வாய்ப்பு இருக்கிறது. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலக சூழ்நிலை அகம் மகிழ்வை உண்டாகும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9**

**அனுகூலத் திக்கு : வடமேற்கு**

**07.05.2005 முதல் 20.06.2005 வரை**

சிலவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்து விடுவீர்கள். அவை குடும்ப சம்பந்தப்பட்ட பூமிப் பொருள் போன்றவையாகவும் இருக்கும். அந்நிய இனத்து நண்பர்கள இல்லமதில் நடக்கும் விருந்து, விழாக்களில் கலந்து கொள்வது இருக்கும். கூட்டு முயற்சியில் ஈடுபடும் தொழில ஒன்றே சிறப்பாக இருக்கும். உங்கள் திட்டங்கள் செயல் முறைக்குக் கொண்டு வர அலைச்சல் 'இருந்து கொண்டே இருக்கும். விவசாயிகளுக்கு தொழில்வழி தன வரவு குடும்பத்தில் சில முக்கிய காரியங்களை நிறைவேற்ற உதவியாக இருக்கும். பெண குழந்தைகளுக்கு ஆபரண சேர்க்கை, புத்தாடை சேர்கையும் உண்டாகும். கடன் வகை கட்டுப்பட்டதாகவே இருக்கும். பிரயாணங்கள் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். கார் இதர இயந்திர கருவிகள் வாங்குவதும் குறிப்பிடத்தக்கது. உறவினர்களுக்கு விருந்தளிப்பதும் இருக்கும். கட்டிட வேலைகளைச் செய்யும் ஒப்பந்தத் தொழிலில் உள்ளவர்களுக்கு சிறப்பான தன ஆதாயம் இருப்பதுடன்,

சியை அளிப்பதாக இருக்கும். அவர்கள் முன்னேற்றத்தில் உங்கள் முயற்சி அதிகமாக இருக்கும். சிலருக்கு அயல் நாடு சென்று வரும் வாய்ப்பும் உருவாகி வரும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 5,1,7**

**அனுகூலத் திக்கு : மேற்கு**

**20.06.2005 முதல் 03.08.2005 வரை**

நல்ல நண்பர்கள் செய்தியும், நின்று போன கடன் வசூல்லாவது தூரத்து சந்தோஷத் செய்தியும் அறியப்படும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் சிறப்பான அம்சம் இருக்கின்றன. தேர்வு எழுதுபவர்களுக்கு இது சிறப்புமிக்க மாதம். உத்தியோகப் பிரிவு ஆண், பெணகளுக்கு இப்போது உங்கள் உணர்வு ஒன்றையே நினைத்துச் செல்வதால் உங்கள் செயல் முறைகளை தாராளமாக்கிக் கொள்ளலாம். புது உடைகள் வாங்குவது, சிலர் நாகா|க வாகன சேர்க்கையை பெறுவதும் குறிப்பிடத்தக்கது. கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு தூரத்து புதிய ஒப்பந்தங்கள் இருக்கின்றன. பழைய ஒப்பந்தங்களைப் புதுப்பிப்பதும் குறிப்பாக உங்கள் தன நில்லையை உயர்த்தும். தைரிய உயர்வையும் தனஆதாயத்தையும் பெறத்தக்கவர்கள். அரசியல் வாதிகள் இணைப்பு மிகவும் நெருங்கியதாக இருக்கும். உங்கள் செயலுக்கு இணங்கியவர்களாக இருப்பது நீங்கள் வெற்றிபெற தகுதி உடையவர்களாக்கும். வாகன வகையில் இருந்த சிக்கல் தீர்க்கப்பட்டுவிடும். வழக்கு மூலம் தாமதப்பட்ட காரியங்கள் வெகு வேகமாக செயன்முறைக்கு கொண்டு வந்துவிடலாம். சத்ருக்களாக இருந்தவர்கள் சமாதான முயற்சிக்கு வருவதால் விட்டுக்கொடுத்துப் போவது உங்களுக்கு ஆதாயத்தைக் கொடுக்கும்.

இருக்கும். சிலருக்கு புதுமணம் ஏற்கும் வாய்ப்பும் தவிர்க்க முடியாது. தெளிவாக பூர்வீகச் சொத்து சம்பந்தமான சில தஸ்தாவேஜுக்கள் உங்களுக்கு கிட்டும். ஆக கலைப்பிரிவு, விவசாயிகள் எல்லோருக்கும் இதே பலன்கள் தொடரும். கணவன், மனைவி உறவில் நல்ல போக்கே இருந்துவரும். நாகரிகப் பொருள் வாங்குவது, மனை, வீடு சித்தி போன்றவையும் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்கள் : 7,2,9**

**அனுகூலத் திக்கு : தென்கிழக்கு**

**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

உங்கள் வேகத்தில் ஒரு தடை இருக்கிறது. தொழில் வழியில் நிதானப் போக்கு உருவெடுத்து இருக்கும். கடிதத் தொடர்பும் காலத் தாழ்வை உண்டாக்கிறது. சில விசயங்களில் கவன மறதியும் இருக்கும். எதிர்பார்த்த பெரிய பிரயாணம் ஒன்று தடைப்பட்டு நிற்கும் வாய்ப்பிருக்கிறது. குடும்ப வேலைகள் மட்டும் குறித்தபடியே முடிக்கப் பெறும். கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு தனநிலை ஓரளவு திருப்தியாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த கடிதம் அல்லது உத்தரவு கால தாமதத்தை உண்டாக்குவதாக இருக்கும். ஆபரண சித்தியும் உண்டாகும். பூர்வீகச் சொத்து வகையில் இருந்து வந்த இடையூறுகளை அகற்றிவிடுவீர்கள். கடன் வழக்கு இவைகளினால் பாதிப்பு இல்லை. தூரத்து கடிதம் வருகின்றன. உங்கள் செயல்முறைகளை மற்றவர் பாராட்டாம்ல் இருக்க மாட்டார்கள். குடும்பத் தேவைகளைக் குறித்தபடி பூர்த்தி செய்து கொண்டே வருவதால் முன்பு இருந்த முணு முணுப்பு இப்போது இல்லை. புதிய உடைகள் சேர்க்கை நல்ல ஆகாரம் சிலர் மருந்து

# உங்களுக்கு எப்படி?

இடையே காழ்ப்புணர்வை வளர்க்க வேண்டாம். மூன்றாவது மனிதர்கள் தலையீடு மேலும் பிரச்சினைகளை வளர்க்கக்கூடும். நல்ல மனிதர்கள் சிலர் அறிவுரை இப்போது தேவைப்படும். இந்த ராசி விவசாயிகளுக்கு பெரிய ஆதாயம் இருந்தும் பயனில்லாமல் போகும். பட்ட கடனுக்கு ஈடுசெய்வதே பெரியதாக இருக்கும். சிலருக்கு இந்தக் கடன் பிரச்சினையே கௌரவத்தைக் குறைப்பதாக இருக்கலாம். எனவே, இதை அனுசரித்து நடந்து கொள்வது மிகவும் அவசியம். இயந்திரத் தொழில் உள்ளவர்களுக்கு தொழில வழியில் அரசாங்க மனிதர்கள் மூலம் சிக்கலும் மன நிம்மதி இன்மையும் இருக்கும். சில சமயம் பிறரால் ஏமாற்றமும் கூட உண்டாக வாய்ப்பு இருக்கிறது. சகோதர வகையை சுமுகமாக்கிக் கொள்வது நல்லது. உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு போய் வருவதும், புதிய தகவலை அறிதலும் உணடாகும். கௌரவ செலவுகள் வந்துவிடும். கடன் வரவேண்டியது வராது. பிரயாணத் திட்டங்கள் பெரிதாக இருந்தாலும் அதன் தன்மை முடிவில் திருப்தியளிக்காது. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் வட்டார மனிதர்களின் ஆதரவு எதிர்பார்த்தபடி இல்லாமையால் உங்கள் நல்ல முயற்சிகள் பாதிக்கப்படுவதும் இருக்கும். கலைப் பிரிவினருக்கு பொதுவாக இம்மாதம் முடிவுவரையில் மந்தமான போக்கே இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இக்காலம் எதிலும் நாட்டம் குறைந்தவர்களாகக் காணப்படுவீர்கள். தொழில் சம்பந்தப்பட்ட கடிதத் தொடர்பை முறையாகக் கையாள முடியாத நிலை இருக்கும். இதனால் மேல்மட்ட மனிதர்களிடம் மனத்தாங்கலும் இருக்கிறது. உத்தியோக மனுப்போட்டிருப்பவர்களுக்கு உரிய காலத்தே பேட்டிக்கு போக முடியாமலும் போகலாம். குடும்ப சிக்கல் இதற்கு மூலகாரணமாக அமையக் கூடும். தொழில் செய்பவர்களுக்கு

கோயிலில் தரும கைங்கரியமும் செய்ய வேண்டியும் இருக்கும். கடன் பாதிப்பு இல்லை. கலைத்துறை தொழில உள்ளவர்களுக்கு புதிய திருப்பம் உண்டாகும். உங்கள் செயல் வேகத்தை அதிகமாக்குவதே சிறப்பாகும். அயல் நாட்டுத் தொடர்பு முன்பு செய்து வைத்தவை மூலம் தனவரவு போன்றவையும் இருக்கும். பெண்கள் வகைக்கு பசும் பொன் வைரக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். இந்த நேரத்தில் மனத்தளர்ச்சி அடையாமல் செயற்படுவது அவசியம். வரவேண்டிய பணத்திற்கு வழக்குத் தொடுப்பதும்கூட இருக்கலாம். சகோதர, சகோதரி வகையில் மனக்கசப்பான போக்கும் இருக்கும். குடும்ப சொத்துப் பொருட்கள் காரணமாகவும் இந்த சூழ்நிலை உருவாகக் கூடும். இம்மாதம் நடுப்பகுதிக்கு மேல், நினைத்தை முடிக்கும் சூழ்நிலை உருவாகக்கூடும். நேர்மையான நண்பர்கள் சிலர் மூலம் வழக்கு குடும்பத்தில் சூழ்நிலை மாற்றம் அடைந்துவிடும். தூரத்துக் கடிதம் சுபவிஷயங்களைத் தாங்கி வரும். குடுமபத்தில் உறவினர் வருகை, விருந்துச் செலவு போன்ற மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இருக்கின்றன. கணவன், மனைவி ஆரோக்கியம் போன்றவைகள் திருப்தியாக இருக்கும். கலைப் பிரிவுத் தொழில் உள்ளவர்களுக்கு இப்போதைய சூழ்நிலை மாற்றம் அடைந்திருப்பது மனத்திருப்தியை உண்டாக்கும். வெளிநாட்டம், நாலு நண்பர்களைச் சந்திப்பது போன்றவையும் இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலகப் போக்கு மகிழ்ச்சி உடையதாகவும் மனநிறைவு உடையதாகவும் இருக்கும். பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை. இலாகா மாற்றங்கள் இருக்கும். உறவினர் உங்கள் வீடு தேடி வருவர். விருந்துக்குப் பஞ்சம் இல்லை. வேடிக்கை நிகழ்ச்சியையும் கண்டு களிப்பீர்கள். குடும்ப சொத்து வகையில் இருக்கும் வழக்கு தள்ளிப்போய் விடும். குழநதைகள் முன்னேற்றம் மகிழ்ச்

பெண்களுக்கு குடும்ப வகையில் உறவினர் மத்தியிலும் நல்ல கௌவரவம் உண்டாகும். பூமிப்பொருள் வாங்குவது, கட்டிட நன்மையும் கூட இருக்கிறது. அடிக்கடி பிரயாணம் உண்டு. செய்தொழில் வழியை செப்பனிடுவதில் தான் உங்கள் கவனம் இருக்க வேண்டும். மற்றவருக்காக அலைச்சல்பட்டு பயன் அடையலாம் என்னும் நோக்கத்தை விட்டுவிடுங்கள். காலம் கடந்த பிரச்சினைகளையும் நடைமுறைக்கு கொண்டுவருவது உங்கள் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்தும். நண்பர்கள் அல்லது உறவினர்கள். இல்லங்களில் குடும்பத்துடன் சேர்ந்து விருந்துன்பதும் உண்டாகும். விவசாயிகளுக்கு இயந்திரக் கருவி வாங்குவது, குடும்பத்துக்கு நாகரிகப் பொருட்கள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். கணவன், மனைவி உறவில் இனிமையான போக்கே தொடர்ந்து இருந்து வரும். காடு, மலைப்பகுதி பிரயாணத்தை மேற்கொள்வதும் கூட உண்டாகும். கலைப்பிரிவினர்கள் மட்டும் சற்று அதிக கவனமாகச் செயற்பட வேண்டும். வார்த்தையோடு நின்றிருந்த விசயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும். இக்கால நடுப்பகுதிக்கு மேல் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது போல புத்திர, புத்திரியர் வகையிலும் கவனம் செலுத்த வேண்டும். விபத்து, அடிபடுதல் போன்றவை அவர்களுக்கு நிகழத்தக்கவை. குடும்பத்திலும் கணவன் மனைவியிடையில் சிறு பு,சல் உதயமாகும். இத்தனைக்கும் காரணம் மூன்றாவது மனிதரே. வெளிநாட்டுக் கடிதம் நல்ல தகவல்களைக் கொணடுவரும். பழைய நண்பர்கள் சிலரை இப்போது சந்திப்பீர்கள். புதிய தொழில முயற்சி அடுத்தடுத்து கூடிவரும். அரசாங்க மனிதர்களின் சந்திப்பு தொழில் துறைக்கு ஆதாயமாக இருக்கும். பிரயாணம் என்பது அடிக்கடி இருக்கிறது. பெரிய மனிதர்கள், முக்கியஸ்தர்கள் சந்திப்பு நம்பிக்கைக்கு உரியதாகும். கணவன், மனவை உறவு தெளிவாக

உட்கொள்வதும் முக்கிய அம்சமாக இருக்கும. குரு உடன் இருக்கிறான், சூரியன் குருவைத் தவிர மற்ற கிரகங்கள் சாரத்தால் அனுகூல நிலையைப் பெற்று இருப்பதால் தொழில் வகையில் நீங்கள் செயற்படும் விதம் மற்றவர் பாராட்டாமல் இருக்காது. பணம் கொடுக்கல், வாங்கல் பரிவுடன் நடக்கும். வேலையாட்களும் ஓரே சீராகச் செயற்படுவர். குடும்பத் தேவைகள் குறித்தபடியே பூர்த்தியாக்கப்படும். இப்போது சிறு சிறு முணுமுணுப்பு இருக்கத்தான் செய்யும். காரணம் நாலில் ராகுதான். புத்திரர், புத்திரியர் கல்விவகை திருப்தியாக இருக்கும். ஆரோக்கியம் பாதகம் இல்லை. வெளிவட்டார நட்பு மிதமானது. பழைய நட்பு மிகவும் நன்றாக இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு உயர்வட்டார மனிதர்களால உா|ய மரியாதை, கௌரவமும் இருக்கும். தனம் கொடுக்கல் வாங்கல் திருப்தியாக வந்துகொண்டு இருக்கின்றன. கடன் பாதிப்பு வராது. குடும்பத்தில் திருமண சம்பந்தமான முயற்சி, விருந்து வேடிக்கையான அனுபவிப்பும் இருக்கும். கலைப் பிரிவு மனிதர்களுக்கு கலக்கமில்லாமல் தொழிலின் போக்கு இருக்கும். உயர் மட்ட மனிதர்களின் சந்திப்பு நல்ல சூழ்நிலையை. நம்பிக்கையை வளர்க்க நல்லவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் இப்போது உண்டாகும். கலைவழி பாராட்டு, தன ஆதாயம், புது உடைகள், அணிகலன் ஒப்பந்தம் உண்டாகும். சில நாகரிக வாகனம் வாங்குவது அல்லது மாற்றி அமைப்பதும் உண்டாகும். மாதம் இரண்டு முக்கிய பிரயாணங்கள் இருக்கின்றன. புது ஒப்பந்தம் பழைய ஒப்பந்தத்தைப் புதுபித்தல் போன்ற நன்மைகள் இருக்கின்றன. கடன் சத்துரு வழக்கு இதர வகைகள் பாதிக்க மார்க்கமில்லை.

**அதிர்ஷ்ட எண்கள் : 4,2,1**

**அனுகூலத் திக்குகள் : வடக்கு, மேற்கு**

*(தொடரும்)*

## இன்று ஒரு தகவல்

# வெறிநோய்

எனக்குத் தெரிந்த ஒருவர் மிகவும் அமைதி யானவர். எப்போதும் மிகவும் மெதுவாகத்தான் நடப்பார். பஞ்சில் கால் வைத்து நடப்பது போல அவ்வளவு பக்குவமாக நடப்பார். எப்போதும் சிரித்த முகம். அப்படிப்பட்ட மனிதர் ஒரு நாள் தலை தெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தார். முகம் வெளிறிப் போயிருந்தது.

விஷயம் என்னவென்றால் ஒரு வெறிநாய் அவரைத் துரத்திக் கொண்டுவந்தது. வெறிநாய் என்றால் அவ்வளவு பயம். வெறிபிடித்த நாய் கடித்து விட்டதென்றால் அது மிகவும் ஆபத்தான விடயம் தான். இருந்தாலும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால் தப்பித்து விடலாம். இப்படித் தாலைதெறிக்க ஓடுவதும் கூட ஒரு எச் சரிக்கை நடவடிக்கை தான். இருந்தாலும் நாய் கடித்து விட்டதென்று வையுங்கள். கடித்தது வெறி நாயா இல்லையா என்றெல்லாம் பார்த்துக்கொண் டிருக்க வேண்டாம். உடனே டாக்டரிடம் போய் ஊசி போட்டுக்கொள்வது தான் நல்லது.

வெறி பிடித்த நாயாக இருந்தால் 10 நாட்களுக்கு மேல் அது உயிருடன் இருக்காது. அதை ஒரு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாலும் மறு பக்கம் டாக்டரையும் பார்க்க ஆரம்பித்து விட வேண்டும்.

முன்பெல்லாம் வயிற்றில் தொப்பிளைச் சுற்றி 14 ஊசி போட்டுக்கொள்ளவேண்டும். இப்போதெல்லாம் 6 ஊசி அதுவும் தோள் பட்டையில் போட்டுக்கொண்டால் போதும். அதைவிடச் சுலபமான மருந்துகள் கூட வந்து விட்டன.

நாய், பூனை, மாடு, குதிரை, ஆடு என எல்லாவற்றிற்குமே வெறிபிடிக்கும். ஒரு வெறி பிடித்த பிராணி கடித்துவிட்டது அல்லது நகத்தினால் கீறிவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே நாம் செய்ய வேண்டிய முதல் உதவி என்ன தெரியுமா? காயத்தைக் கழுவவேண்டும். நிறையத் தண்ணீர் ஊற்றி சோப் போட்டுக் கழுவ வேண்டும். அதன் பின்பு ஏதாவது கிருமிநாசினி அல்லது ஸ்பிரிட் தடவேண்டும். இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால் காயத்திற்குக் கட்டுப்போடக்கூடாது. அதைத்திறந்தே வைக்க வேண்டும். உடனே டாக்டரிடம் போய் விட வேண்டும்.

வெறி நோய் என்பது விலங்குகளின் மூலமாக மனிதர்களுக்குப் பரவக்கூடிய ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படும் நோய். 4 ஆயிரம் வருடங்களுக்கு முன்பே மனிதன் இந்த நோயைப் பற்றித் தெரிந்து கொண்டான். ஆனால் நூறு வருடங்களுக்கு முன்னர் தான் இந்த நோயிலிருந்து தப்பிக்கொள்ள வழிதெரிந்தது. உலக வரலாற்றிலேயே அது ஒரு திருப்பு முனை. பிரான்ஸ் நாட்டில் வேதியியல் வல்லுநர் இருந்தார். லூயி பாஸ்டர் அவரது பெயர். இவர் 1880 இல் ஒரு வெறி நோய் ஆராய்ச்சியை ஆரம்பித்தார். 1885 ஆம் ஆண்டில் ஒரு தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடித்தார்.

ஜோசப்மெய்ஸ்டர் என்று ஒரு சிறுவனுக்குத்தான் முதன் முதலாகத் தான் கண்டுபிடித்த தடுப்பூசியைக் போட்டார். வெறிநோயிலிருந்து அந்தப் பையனைக் காப்பாற்றி விட்டார்.

அவரைக் கௌரவிக்கும் வகையில் அன்று முதல் வெறிநோய்த் தடுப்பூசிக்கு பாஸ்ட்டர் வெறிநோய்த்தடுப்பூசி என்றே பெயர். பல பாஸ்ட்டர் நிறுவனங்கள் உலகம் முழுவதும் உருவானது. நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

முதலாம் உலகப் போரின் போது நாசிக் கூட்டத்தினர் பாஸ்ட்டர் நிறுவனத்தை இடித்துத் தரைமட்டமாக்கி விடமுயற்சி செய்தார்கள் அப்போது அங்கே வாயில் காப்பாளனாக இருந்த ஒரு வீரன் அந்த நிறுவனத்தைக் காப்பாற்றும் முயற்சியில் தனது உயிரைத்தியாகம் செய்துவிட்டான். அந்த வீரன் யார் தெரியுமா? அவன் தான் முதலில் வெறி நோயிலிருந்து லூயி பாய்ஸ்டரால் காப்பாற்றப்பட்ட ஜோசப் மெய்ஸ்ட்டர்.

மருந்து கண்டுபிடித்து நூறாண்டுகளைத் தாண்டியாயிற்று இப்போது நவீன மருந்துகள் எல்லாம் வந்து விட்டன. இருந்தாலும் கவனக்குறைவின் காரணமாக உயிரிழப்போர் உள்ளனர்.

ஒருவன் ஓடி வந்து "என்னை ஒரு வெறி நாய் கடித்துவிட்டது" என்றான் "சரி அப்படியென்றால் அந்த நாயைக் கவனிக்க வேண்டும். உன்னைக் கடித்த நாய் எதுவென்று உன்னால் அடையாளம் காட்டமுடியுமா?" என்று கேட்டார் டாக்டர். 'முடியும்' என்றான் இவன். "எப்படி?" என்றார் டாக்டர். "அந்த நாய் என்னைக் கடிப்பதற்கு முன்பாகவே முன் ஜாக்கிரதையாக நான் அதன் காதைக் கடித்துவிட்டேன். இதோ எனது பையில் தான் வைத்திருக்கிறேன் என்று கூறி எடுத்துக் காட்டினான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசின் முரண்பாடான நிலைமைகள் யுத்த நிறுத்தத்தைப் பாதிக்கும்

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நிரந்தரமானதும் தெளிவானதுமான நிலைப்பாடு ஒன்று இல்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசாங்கம் இது தொடர்பாக அடிக்கடி வெளியிடும் அறிக்கைகள் முன்னுக்குப் பின் முரணானவைகள் என்றும் இவை அரசியல் தீர்வுக்கு மட்டுமன்றி தற்போது பேணிக் காப்பாற்றப்பட்டுவரும் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது என்றும் அக்கட்சி எச்சரித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு குறித்து ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு தசாப்தகாலமாக இடம்பெற்று வந்த இனப்பிரச்சினையை ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் ஒரு தேசியப் பிரச்சினையாகவே கருதி வருகிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அல்லது அது தொடர்பான எந்த வகையிலான நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்கும். அதற்காக குறைந்த பட்சம் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான அடிப்படை நிலைப்பாட்டையாவது அரசாங்கம் தெரிவிக்கவேண்டும்.

இதேவேளை, கருத்து வேறுபாடுகளை மறந்து நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சிதறடிக்காமல் தங்களுடன் இணைந்து செயற்பட அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

(த-121)

## பாடசாலை நேரத்தில் தனியார் வகுப்புக்களில்

# கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கல்வியமைச்சு அதிபர்களுக்குப் பணிப்புரை

(கொழும்பு)

பாடசாலை நேரத்தில் சில மாணவர்கள் மேலதிக தனியார் வகுப்புக்களுக்குச் சமுகமளிப்பதாகவும் சில ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் பண அறவீடு செய்து தனியான உதவி வகுப்புக்களை நடாத்துவதாகவும் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

கல்விச் சீரமைப்பின் கீழ் பிள்ளைகளின் நிபுணத்துவங்களை அபிவிருத்தி செய்வதில் கூடிய கவனம் மற்றும் முயற்சி எடுக்கப்பட வேண்டி யுள்ளதோடு தற்போது நடைபெறும் முறைக்கேற்ப தனிப்பட்ட உதவி வகுப்புகள் காரணமாக அந் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதில்லை.

பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள உரிய பிரயோகச் செயற்பாடுகள் கொண்ட பாடங்களை நடாத்துவதால் மாத்திரமே எதிர்பார்க்கப்படும் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

தற்போது நிலவும் முறையில் தனிப்பட்ட உதவி வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன.

எனவே இது சம்பந்தமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்படுகின்றது.

★ மாணவரின் வரவு பற்றி ஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதோடு சுற்றுநிருபங்களுக்கேற்ப பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக 80 சதவீத வரவின் தேவையை அமுல்படுத்தவேண்டும்.

★ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் பிரயோகச் செயற்பாடுகள் என்பனவற்றின் மீது விசேட கவனம் செலுத்தப்படவேண்டுடியுள்ளதோடு பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடுகளின்படி அதற்கான தரங்களை தாங்கள் வழங்கவேண்டும். கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ்களில் இத்தரங்கள் குறிப்பிடப்படும்.

★ எக்காரணம் கொண்டும் பாடசாலை நடைபெறும் காலவேளையில் ஆசிரியரினால் தனிப்பட்ட உதவி வகுப்புக்கள் நடாத்தப்படக் கூடாது. யாராவதோர் ஆசிரியர் அவ்வாறு செய்வதாயின் அதிபர்கள் அதுபற்றி விசாரித்து சாட்சிகளடங்கிய அறிக்கை ஒன்றை தயாரித்து அவ்வாறான ஆசிரியர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இதேவேளை, பாடசாலை அபிவிருத்தி மன்றத்தின் இணக்கப்பாட்டின் பேரில் பின்தங்கிய மாணவர்களுக்கு வகுப்பறை முறையிலான மாற்று கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு இது எவ்வித தடையையும் ஏற்படுத்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

# இராசி பலன்

25.08.2004 (*ஆவணி 09, புதன்கிழமை*)

தசமி மு.இ 7.39 மணிவரை

மூலம் பி.இ. 3.56 வரை

இராகுகாலம் 12.05 - 1.35 மணிவரை

சுபநேரம் 4.35 - 6.05 மணிவரை

ஆவணி மூலம்

**மேடம்**

தந்தைவழி உறவு, புதியதிட்டமிடல், காரிய தாமதம், பணவிரயம்.

**இடபம்**

எதிர்பாராத மனஸ்தாபம், காரிய தடங்கல், பிரயாண பயம், போசன சுகம்.

**மிதுனம்**

களஸ்திர நன்மை, பெருமையடைதல், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்.

**கடகம்**

மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், செய்தொழில் விருத்தி, நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம்**

வியாபார நன்மை, குடும்பக்கவலை, உடல்நலக் குறைவு, பணவிரயம்.

**கன்னி**

தாய்வழி உறவு, புதிய விடயம், முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம்.

**துலாம்**

எடுத்த காரியம்கைகூடும், போசன சுகம், கூட்டு முயற்சி, தெய்வ சிந்தை.

**விருச்சிகம்**

உணர்சி வசப்படல், அதிகசெலவு, வேலைப்பளு, முயற்சி தாமதம்.

**தனுசு**

தெய்வசிந்தை, நல்லமுயற்சி, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம்.

**மகரம்**

காரிய அலைச்சல், சுபசெலவு, சயனசுகக் குறைவு, உறவினர் சந்திப்பு.

**கும்பம்**

பெருமையடைதல், தடைப்பட்ட காரியம், கைகூடும், பணவருவாய், குடும்பநலம்.

**மீனம்**

அதிகாரம், தொழிலில் ஆர்வம், ஆரோக்கியம் காரியம் அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# நாணய மாற்றுப் பெறுமதி அதிகரிப்புக்கு காரணம் கூறுகிறது ஜே. வி. பி.

(கொழும்பு)

மத்திய வங்கியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிகுச் சார்பான அதிகாரிகளின் சூழ்ச்சியினால் கூட்டமைப்பு அரசாங்கம் அதிகாரத்துக்குவந்த பின்னர் அமெரிக்க டொலரின் நாணய மாற்றுப் பெறுமதி அதிகரித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் தலைமைச் செயலாளர் ரில்வின்சில்வா விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்தமையும் இதற்கு ஒரு காரணமாகும். ரூபாவின் பெறுமதியை தளம்பல் அற்ற நிலைக்குக் கொண்டுவருவதற்கு குறுகியகால மற்றும் நடுத்தர காலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் பெறும்தியை 100முதல் 102 வரைதக்க வைத்துக்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

கடந்த 26 வருடங்களில் நடைமுறைப்படுத் தப்பட்டதவறான பொருளாதாரக் கொள்கைகளின் மூலம் எட்டப்பட்ட தீர்வுகளிலிருந்து சமூகத்தை ஒரேயடியாக மீட்டெடுப்பதென்பது சிரமமானதோர் விடயமாகும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-8)

### பங்களாதேஷில் பதற்ற நிலை;

# பேரணிக் குண்டு வெடிப்பின் எதிரொலி இருநாள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு

பங்களாதேஷில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசினா மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நடக்கும் வன்முறைச் சம்பவங்களால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்நாட்டின் தலைநகரான டாக்காவில் ஷேக் ஹசினா பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தது தெரிந்ததே. இதில் 18 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 300 பேர் காயமடைந்தனர்.

ஷேக் ஹசினா சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். இந்தச் சம்பவத்தையடுத்து ஹசினாவின் அவாமி லீக் கட்சியினர் நாடு முழுவதிலும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். கலவரங்களில் ஏராளமான வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. வன்முறைச் சம்பவங்களில் 50 பேர் காயமடைந்துள்ளனர், வர்த்தக நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. இரண்டு நாள் பொது வேலை நிறுத்தத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால் பங்களாதேஷ் பதற்ற நிலையில் இருக்கிறது. (து)

# கமீர் கர்சாய் பதவி விலகாவிடின் ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிப்போம்

## யூனிஸ் ஹனோனி குழு எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கமீர் கர்சாயை பதவிவிலக வேண்டும் என முன்னாள் கல்வியமைச்சர் யூனிஸ் ஹனோனியின் வேட்பாளர் குழு கோரிக்கை விடுத்துள்ளது.


எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில், முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் 17 வேட்பாளர்கள் போட்டியிவுள்ள போதிலும், 12 பேர் ஒருங்கிணைந்த குழுவே கமீர் கர்சாயை பதவிவிலக வேண்டும் என இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு பதவி விலகாவிடின் தேர்தலைத் தாம் பகிஷ்கரிக்கப் போவதாக அக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் முடியும் வரை இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கமீர் கர்சாய் தனது ஜனாதிபதி பதவியையும், அமெரிக்க இராணுவத்தின் உதவியையும் தேர்தலில் வெற்றி பெற சாதகமாகப் பயன்படுத்தி வருகிறார் என்று எதிர்த்தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர். (யே)



சியோலில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் தென்கொரிய ஜனாதிபதி ரோமு ஹியுனும் மலேசியப் பிரதமர் அப்துல்லா அஹமட் படாவியும் படையினரது அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டபோது.

## WORLD NEWS உலக தரிசனம்

# விமானம் மலையில் மோதியதில் 25 பேர் உடல் கருகிப் பலி

(கராகஸ்)

ஆர்ச்சியாத் தீவிலுள்ள விமானப்படை முகாமிலிருந்து, மராக்காய் பகுதியிலுள்ள விமானப் படை முகாமை நோக்கி புறப்பட்ட விமானமொன்று, மலையில் மோதி விபத்துக்குள்ளானதில் 25 பேர், உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

இத்தீவு வெனிஸுவேலாவின் தலைநகரான கராகஸிலிருந்து 180 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

ஆர்ச்சியாத் தீவில் இருந்து புறப்பட்ட இவ்விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது தகவல் தொடர்பு திடீரென துண்டிக்கப்பட்டுவிட்டது.

நீண்ட நேரத்தின் பின்னர் அவ்விமானம் கராபோடோ மலையில் மோதி நொருங்கி விழுந்த விடயம் தெரியவந்தது.

இவ்விமானத்தில் பயணம் செய்த ஊழியர்கள், விமானப்படை அதிகாரிகளின் 5 குழந்தைகள் ஆகியோர் உட்பட 25 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மலை அடிவாரத்தில் அவ்விமானத்தின் பாகங்கள் தீப்பிடித்து எரிந்த நிலையில் கிடந்தன. பலியானவர்களின் உடல்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. மேலும், விமானப் படை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (யே)



இஸ்ரேலிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனர்களை விடுதலை செய்யக் கோரி, பலஸ்தீனப் பெண்கள் நேற்ற முன் தினம் சிறைவாசம் அனுபவிக்கும், பலஸ்தீனர்களின் புகைப்படங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் காட்சி.

### அல்-கெய்டாவுடன் தொடர்பு என

# முன்னாள் அமைச்சரை கைது செய்ய உத்தரவு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் அமைச்சர் ஜபீர் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவருக்கு அல்-கெய்டா இயக்கத்துடன் தொடர்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் மற்றும் அமெரிக்க நிலை யங்கள் மீது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதத் திட்டத்தில் தொடர்பிருந்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜபீர் இப்ராஹிம் தம் மீதான இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

வடமேற்குப் பகுதி நகரான பிஷாபர் மேல் நீதிமன்றத்தில் முன்பிணை கோரி இவர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

எந்தவிதமான பயங்கரவாத மற்றும் கொலைச் சம்பவங்களுடன் தமக்குத் தொடர்பில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அல்-கெய்டாவுடன் தொடர்புடைய 10 பேரின் பெயரைப் பாகிஸ்தான் உள்விவகார அமைச்சர் பௌஷால் ஸாலே வெளியிட்டிருந்தார். (யே)

# அமெரிக்கச் சிறைச்சாலையில் 200 கைதிகள் உண்ணாவிரதம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள வாக்கென்கட் சிறைச்சாலையில் 200 வெளிநாட்டுக் கைதிகள் உண்ணாவிரதமிருந்து வருகின்றார்கள்.

இவர்கள் தம்மை விடுதலை செய்யக்கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஏன் கைது செய்யப்பட்டோம்? தம் மீதான வழக்கு என்ன? என்ற விபரங்கள் எதுவும் தெரியாத நிலையிலேயே இவ் உண்ணாவிரதத்தை மேற்கொள்கின்றனர்.

நியூயோர்க் நகரில் 2001ஆம் ஆண்டு 110 மாடி இரட்டைக் கட்டடம் தகர்க்கப்பட்டதையடுத்து கைது செய்யப்பட்ட இவர்கள், மேற்படி சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

யாருடனும் இவர்கள் தொடர்பு கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இச்சிறைக் கைதிகள் தாம் பெரிதும் சிரமங்களை அனுபவித்து வருவதாகவும் கூறியுள்ளனர். (யே)

# ஈரானை சோதனையிடுமாறு அமெரிக்கா ஐ.நா விற்கு அழுத்தம்

(தெஹரான்)

அமெரிக்கா, ஈரான் மீது குற்றம் சாட்டுவதில் குறியாக இருப்பதாக, ஈரான் வெளிவிவகார அமைச்சர் கமால் ஹராஸி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈரானைக் குற்றவாளியாக்குவதற்கான காரணங்களைக் கண்டுபிடிப்பதில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அணுவாயுதப் பரிசோதனைக் குழுவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அணுவாயுதப் பரிசோதனைக் குழு ஈரானில் தேடுதல்களை நடத்தியுள்ளது. அதன் அறிக்கை ஈரானைப் பாதிக்கும் வகையில், அமைய வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாக ஈரான் வெளிவிவகார அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார். (யே)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தருஉம் பகை. -குறள்

வலம்புரி

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் கிடைக்குமா?

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 2003 ஆம் ஆண்டு இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் மோசடிகள் நடந்திருப்பதாக ஆளுநர் அசோக ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரணைகளை நடத்த விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. யுத்த சூழ்நிலையில் ஆசிரியர் நியமனங்களை அரசு மேற்கொள்ளாததன் காரணமாக தொண்டர் ஆசிரியர்களின் துணையோடு இயங்கிய பாடசாலைகள் வடக்கு கிழக்கில் நிறையவே உண்டு.

இவ்வாறு தொண்டர் ஆசிரியர்களின் சேவையினால் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை இயக்கவும், அதன் மூலம் அப்பிரதேச மாணவர்கள் கல்வி வாய்ப்பைப் பெறவும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிகக் குறைந்த வேதனத்தில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குமாறு பொது அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை - போராட்டங்கள் காரணமாக 2003 ஆம் ஆண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனத்தில் பெரும் மோசடிகள் இடம்பெற்றதாக நியமனம் வழங்கப்பட்டபோதே பலராலும் பேசப்பட்டது. அது தொடர்பாக பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் உட்பட அனைவருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர். எனினும், அதுபற்றி அன்று யாருமே அக்கறை கொள்ளவில்லை.

தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக இப்போது கூறும் ஆளுநர் அசோக ஜெயவர்த்தன தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போதும் ஆளுநராக இருந்தார். எனினும், அன்று அவர் மௌனம் சாதித்ததன் காரணமாக விசுவாசத்துடன் பல வருடகாலமாக சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் பலர் ஆசிரியர் நியமனம் பெறமுடியாமல் போயிற்று. தங்களுக்கு ஏற்பட்ட மோசடி குறித்து பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கண்ணீருடன் எழுதிய முறைப்பாட்டுக் கடிதங்களுக்கு பதில் கடிதம் அனுப்பாமலே மோசடிகள் மறைக்கப்பட்டன.

பலவருட காலமாக தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய பலருக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்காமல் போக, அரசியல் செல்வாக்கு மற்றும் குறிப்பிட்ட சில அதிபர்களின் மோசடிகள் காரணமாக பாடசாலைப் பக்கமே செல்லாதவர்கள் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர்.

நியமனம் கிடைக்கப்பெறவேண்டியவர்களுக்கு நியமனம் கிடைக்காமல் போக, செல்வாக்கு மிக்கவர்கள் நியமனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, போலிச் சான்றிதழ்கள், உறுதியுரைக் கடிதங்கள் மூலம் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் போதிய ஆசிரியப் பயிற்சி மற்றும் திறமையின்மை காரணமாக கற்பித்தலில் தோல்வி கண்டுவிட அதனால் மாணவர்கள் பெரும் பாதிப்பை அடைகின்றனர்.

பல வருடங்கள் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி பாடசாலைகள் இயங்குவதற்கு காரணமாக இருந்தவர்கள் ஆசிரியர் நியமனம் கிடைக்காததால் பாடசாலைகளைவிட்டு வெளியேற பாடசாலைப் பக்கமே வராதவர்கள் அதிபர்களின் உறுதியுரையுடன் ஆசிரியர் நியமனம் பெற்று மாணவர்களின் கல்விக்கு பாதகமாக அமைந்துவிட்டனர்.

இவ்வாறு கல்வித்துறை சார் நியமனங்களில் வலுவடையும் செல்வாக்குக் கலாசாரம் எதிர்கால மாணவர்களின் கற்றல் செயற்பாட்டைப் பாதிக்கும் என்ற உண்மை நிலையை உணர்ந்து உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்.

அவ்வகையில் தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பில் இடம்பெறவுள்ள விசாரணைகளானது வெறும் கண்துடைப்பாக இராமல் பாதிக்கப்பட்டவர்கள் நன்மையடையவும் மோசடி செய்தவர்கள் தண்டிக்கப்படவும் வழி செய்வதாக அமையவேண்டும்.

# மட்டு.வில் அதிகரிக்கிறது கொலைகள் கைவிரிக்கிறது கண்காணிப்புக்குழு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் சமேதபெரேரா தெரிவித்தார்.

இப்பிரதேசங்களில் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் குறிவைத்து இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்களை அடுத்தே இதற்கு அவசியம ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளே ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுபாட்டு பகுதியினுள் நுழைந்து இத்தகைய கொலைகளை நடத்தியுள்ளதாகவும் இது பகிரங்கமானதொரு யுத்தநிறுத்த மீறல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கொலைச்சம்பவங்கள் குறித்து அலட்சியப் போக்குடன் இருப்பதாக இராணுவத் தரப்பு தெரிவித்துவரும் குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து தெரிவித்த யுத்த நிறுத்த கண்காணிப்புகுழுவின் பிரதித் தலைவர் ஹக்ஹெப் ஹெக்லன்ட் ஐம்பது பேரைக் கொணட கண்காணிப்புக்குழுவால் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது முடியாதகாரியம் எனவும யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்கச் செய்யும் அதிகாரமே தமக்கு உண்டு எனவும் கொலச்சம்பவங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்கு இல்லை எனவும் தெரிவித்தார். (ப-64)

# ஸ்ரீ.மு.கா.பாராளுமன்ற அங்கத்துவத்தை நீக்கும் தீர்மானம் சட்ட விரோதமானது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீடம தமது மூன்று உறுப்பினர்களின் பாராளுமன்ற அங்கத்துவத்தை ரத்துச் செய்வதென மேற்கொண்ட தீர்மானம் சட்டவிரோதமானதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கா தலைமையிலான 3 நீதியரசர்கள் குழு பாராளுமன்ற உறுப்பினர்களான அகமட் பைலா. அப்துல்மஜீத் ரிஸாத் பதியூதீன் ஆகியோர் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த பின்னர் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது.

தமது அங்கத்துவம் ரத்துச் செய்யப்பட்டமை சட்டவிரோதமானதென பிரகடனப்படுத்துமாறு மனுதாரர்கள் மனுவில் கோரியிருந்தார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் செயலாளர் நாயகம் அஷாத் அலீ ஆகியோரை மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிட்டிருந்தார்கள்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பூர்வாங்க ஆட்சேபனைகளை கிளப்பியதுடன் இவ்வழக்கை விசாரிக்கும் நியாய ஆதிக்கம் உயர் நீதிமன்றத்திற்கு இல்லை என்றும் வாதிட்டார்.

ஆனால் அரசியல் யாப்பின் 91ஆவது பிரிவிற்கு அமைய அந்த அதிகாரம் இருப்பதாக உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே தமது கட்சி அங்கத்தவர்களை வெளியேற்றுவது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வெளியிட்ட கடிதம் சட்ட ரீதியாக செல்லுபடியற்றது எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (க-60)

## வலைப்பின்னல் கேபிளைச் சேதப்படுத்திய

# கப்பலைத் தடுத்து வைக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள 'ஸ்ரேற் ஒவ் நாக்லண்ட்' என்ற இந்தியக் கப்பலைத் தடுத்து வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் துறைமுகப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் கடற்பகுதிக்குள் ரெலிக்கொம் நிறுவனத்திற்குச் சொந்தமான சர்வதேச வலைப்பின்னல் கேபிள் ஒன்றை சேதமாக்கிய குற்றஞ்சாட்டின் பேரிலேயே நீதிமன்றம் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ரெலிக்கொம் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பரிசீலனை செய்த பின்னர் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச வலைப்பின்னல் கேபிளை சேதமாக்கிய குறிப்பிட்ட இந்தியக் கப்பலிற்குச் சொந்தமான கம்பனியிடம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் 50 லட்சம் அமெரிக்க டொலர் இழப்பீடு கோரியுள்ளது.

இது தொடர்பாக மேல் நீதிமன்றில் ரெலிக்கொம் நிறுவனம் தாக்கல்செய்த மனுவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தாக்கல் செய்த மேற்படி மனு மீதான விசாரணைகள் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளன. (ற-க,60)

# பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை அதிக மாணவர்கள் உள்ளீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை எதிர்வரும் தைமாதத்திற்கு முன்னர் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான மாணவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் இம்முறை வழமைகக்கு மாறாக அதிகரித்த மாணவர் தொகையினர் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளதாகவும் ஆணைக்குழு மேலும் தெரிவீத துள்ளது. (ற-ப,64)

## வரட்சி நிவாரணத்திற்கென

# 850 மெற்றிக் தொன் கோதுமை மா இறக்குமதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வரட்சினால் பாதிகப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கென 850 மெற்றிக்தொன் கோதுமைமா இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனைக்கு அமைய வரட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கென சமூக சேவைகள் திணைக்களம் 5 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கவும் அவர்களுக்கு வரட்சி நிவாரணங்களை வழங்குவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படும் என சமூக சேவைகள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ற-க,60)

## வன்னியின் இறுதி மன்னன்

# பண்டார வன்னியனின் 201ஆம் ஆண்டு நினைவுதினம்

(ஒட்டுசுட்டான்)

வன்னிமண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 201 வது ஆண்டு நினைவு தினம் மிகச் சிறப்பாக அனுட்டிக்கப்படவுள்ளது.

நாளை மாலை 4 மணிக்கு பண்டாரவன்னியனின் கல்லறை உள்ள கற்சிலைமடு வளாகத்தில் முல்லைத்தீவு அரச அதிபர் தலைமையில் இந் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதன் போது பாரம்பரிய கலை நிகழ்வுகள் மற்றும் நாடகங்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன. (ற-ப)

# வீட்டுத் தோட்டச் செய்கையை விருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய மட்டத்தில் வீட்டுத் தோடடச் செய்கையை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவிற்கு ஈடுகொடுக்கும் வகையில் மக்களின் பொருளாதாரததை மேம்படுத்துவதற்காக பிரதமரது விசேட ஆலோசனையின் பேரிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள நிலங்களைப் பயன்படுத்தும் வகையில் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதற்கான மானியங்களை வழங்க பிரதமர் அலுவலகம் முன் வந்துளளது. (ற-ப, 64)

## தினசரி தியானம்

# விவேகச் சிந்தனைகள்

ஆன்மாவைஆன்மாவாக உணர்வது தான் செயன்முறை மதம். மகோன்னதமான இந்தக கருத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் வரையில் வேறு எதுவும் நல்லது தான். துறவு தியானம் இவற்றால் தான், புலன் களைத் துறப்பதால் தான் நம்மை ஜடப் பொருளோடு கட்டிக் கீழிழுத்து வைத்திருக்கின்ற முடிச்சுக்களை வெட்டுவதால் தான் அந்த அனுபூதியை அடைய முடியும்.

சுவாமி விவேகானந்தர்

# அமெரிக்க அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் உதவியுடன் யு.எஸ். எயிட் நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட மூளாய் வைத்தியசாலையின் வைத்தியர் விடுதி இன்று உத்தியோகபூர்வமாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப் படவுள்ளது.

இக் கையளிப்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கத் தூதரகப் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் என்ற் விஸ்ரில் மக்கள் தொடர்பாடல் அதிகாரி பிலிப் பிறைன் ஆகியோர் இன்று யாழப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இதேவேளை மூளாய் வைத்தியசாலை பிரசவ விடுதிக்குத் தேவையான உபகரணங்களையும் இவர்கள் கையளிக்கவுள்ளனர்.

அத்துடன் நண்பகல் 11 மணிக்கு சண்டிலிப்பாயில் அமைந்துள்ள அகதிமுகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு உபகரணங்கள் வழங்கவுள்ளனர்.

பிற்பகல் 2 மணியளவில் சாவ்கச்சேரிக்குச் செல்லும் இவர்கள் அங்கு சுயதொழில் மேற்கொள்ளும் பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கவுள்ளனர். (ச)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு வெள்ளோட்டம் இடம்பெற்று மறுநாள் தேர்த்திருவிழா நடைபெறும். (ந)

---

### அக்கரைப்பற்று...

கொல்லப்பட்டவர் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை அடுத்த மாதம் 7ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அவ்வுத்தரவை ஏற்றுக்கொண்ட குறிப்பிட்ட கைதி சிறைச்சாலைக்கு திரும்ப ஆயத்தமானபோது பார்வையாளர் வரிசையில் இருந்த நபர் ஒருவரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டவர் நீதிமன்ற சுவர் வழியாக ஏறி, தயாரான நிலையிலிருந்த மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார்.

இத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்தில் 9 மில்லி மீற்றருக்குரிய 16 வெற்றுத்தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேக நபருடன் கைது செய்யப்பட்ட தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் என்பவர் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் வைத்து சச்சு மாஸ்டருடன் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இதேவேளை நீதிமன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிறைச்சாலை காவலர் ஒருவரும் சிறைச்சாலை ஊழியர் ஒருவரும் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ச)

---

### கைதிகளின்...

போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளுடன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. தங்கேஸ்வரி பேச்சு நடத்தி அவர்களின் விடுதலைக்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததையடுத்தே கைதிகள் போராட்டத்தை கைவிட்டனர்.

6 ஆண் கைதிகளும் 4 பெண் கைதிகளுமே போராட்டத்தில் ஈடுபட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர். சீனிவாசன் தெரிவித்துள்ளார். (ச-121)

---

### கண்காணிப்புக்...

பதற்றமான சூழ்நிலை முல்லைத்தீவு கடலில் புலிகள் கடற்படைப் ப்டகை அனுமதிக்காமை போன்றவை குறித்து பேசப்பட்டதாக சிறில் ஹேரத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் படுகொலைகளை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடப்போவதாகவும் அதனை விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்குமாறும் இச் சந்திப்பின்போது சிறில் ஹேரத் கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் படுகொலைகளுக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கண்காணிப்புக் குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை. விடுதலைப் புலி உறுப்

---

### ஹெவ்டே...

குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முல்லைத்தீவு கடற்பகுதியில் காணப்பட்ட புலிகளின் ரோலர் படகிலிருந்து ஆயுதங்கள் இறக்கப்பட்டதாக கடற்படையினர் குற்றஞ்சாட்டியதை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க,7)

### திருத்தம்

கேள்வி அறிவித்தல் - யாழ். வலய கல்வித் திணைக்களத்தின் 21-08-2004 ஆம் திகதி சனிக்கிழமை பத்திரிகை விளம்பரம் தொடர்பாக

---

## புலிகளுக்கு எதிராக...

யில் வாழும் மூவினத்தவருக்கும் எவ்வித பாதகத்தையும் ஏற்படுத்தாத வகையில் நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு நோர்வே முயற்சிக்கின்றது.

அத்துடன் அரசையும் விடுதலைப் புலிகளையும் சமாதானத் தீர்வை நோக்கி அழைத்துச் செல்வதற்கு நோர்வே விரும்புகின்றது. மாறாக இந்த நடவடிக்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க நோர்வே விரும்பவில்லை.

அவ்வாறு அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டுமானால் இந்தியாவிடம் அல்லது அமெரிக்காவிடமே இவ்விரு தரப்பினரும் செல்லவேண்டும். இவை தவிர தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு உகந்த அம்சமாக இருக்கின்ற போதிலும் இலங்கை அரசு இதன் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முன்வராதமை துரதிஷ்டவசமானது என்றே கூறவேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டை ஏற்று கருத்து வெளியிடுகின்றனர். இதனால் ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் இது குறித்து பேசவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இதேவேளை, அதிசக்திமிக்க ஒலிபரப்புக் கருவிகளை விடுதலைப் புலிகளுக்கு நோர்வே அரசாங்கம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அனுமதியுடனேயே வழங்கியிருந்தது. இதனால், இது குறித்து தவறான விமர்சனங்களை நான் முற்றாக நிராகரிக்கிறேன் என்றார். (க)

---

### கிழக்கு மாகாணப்...

வார்த்தைகளின்போது கிழக்கிலங்கையில் தொடரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும், திருகோணமலைத் துறைமுகம் தொடர்பான சர்ச்சை குறித்தும் ஆராய்ந்துள்ளோம்.

முதலாவது விடயமான தொடரும் கிழக்கிலங்கைப் படுகொலைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஊக்கமளிக்காமலும், சமாதானப் பேச்சுவார்த்தையை கட்டியெழுப்புவதில் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் கிழக்கிலங்கை படுகொலைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாததாகும்.

திருகோணமலை துறைமுகத்தின் சர்ச்சை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. அது குறித்து பேசுவதற்கு இது தக்க தருணம் அல்ல. எனினும், திருகோணமலைத் துறைமுகம் தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடன் தீவிரமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்.

இவ் விடயம் தொடர்பாக இன்று நாம் விடுதலைப் புலிகளுடன் பேச இருக்கிறோம். இரு தரப்பினரின் விசாரணையின் பின் அது தொடர்பாக இரு தரப்புடனும் பேசவுள்ளோம். எங்கள் முடிவுகள் குறித்து ஏற்கனவே இரு தரப்புக்கும் அறிவித்துள்ளோம்.

இவ் விடயம் தொடர்பாக இன்று விடுதலைப் புலிகளுடன் பேசியபின் இரண்டு தரப்பினரையும் பேச்சுவார்த்தை களத்தில் ஒன்றாக அமர வைத்து பேச்சுவார்த்தையை தொடர்வதுதான் எமது முக்கிய நோக்கமாகும்.

அது மட்டுமல்லாமல் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் பாதுகாப்பு படையினரும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து சந்தித்து மனம்விட்டுப் பேசி விவாதிக்க வேண்டும். அதன்பின் முக்கிய முடிவுகளுக்கு அவர்கள் வரவேண்டும். ஏனெனில் கிழக்கிலங்கையில் தற்போது இடம்பெற்று

---

### மல்வத்தைபீட...

நேரடியாகப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டியதன் அவசியம் குறித்து மல்வத்தை மகாநாயக்கர் எடுத்துக் கூறியுள்ளார்.

இதற்கான வாய்ப்புக்களுக்காகத்தான் ஜே.வி.பியினருடன் பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாக தேரர் கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கவென வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகை தரும்போது இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் தம்மால் பார்வையாளராக இருக்க முடியாது என மல்வத்தை மகாநாயக்கர் பி.சந்திரசேகரனிடம் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளை மல்வத்தை மகாநாயக்கர் சந்திப்பதற்கான ஆயத்தங்களை தாம் உடனடியாக மேற்கொள்ளப் போவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் உறுதியளித்தார். (ச,121)

---

### இளம்பெண்ணின்...

வறை குழியில் இருந்து ஆடைகளுடன் கழுத்தில் சுருக்குக் கயிற்றுடன் காணப்பட்ட நிலையில் அப்பெண்ணின் சடலத்தை அவரது தாயாரும் சகோதரியும் அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட மனித மண்டையோடுகள் மற்றும் எழும்புகள் தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தார்.

இதேவேளை காணாமல்போனதாகக் கூறப்படும் பெண்ணின் சகோதரி தெரிவித்த தகவலின் அடிப்படையில் நான்கு பேரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தினர். இதன்போது மூன்று சந்தேக நபர்கள் குறிப்பிட்ட பெண்ணை கொலை செய்து கழிவறைக் குழியில் புதைத்ததாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து இப் பெண்ணிண் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்த பின்னர் பெண்ணின் கழுத்தில் கயிறைக் கட்டி இழுத்துச் சென்று கழிவறைக்குள் புதைத்ததாகவும் அவரது நகைகளை விற்று பணத்தை பங்கிட்டுக் கொண்டதாகவும் நீதிபதியிடம் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கு

கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் படுகொலைகளுக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கண்காணிப்புக் குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை விடுதலைப் புலி உறுப்பினர்களின் கொலையுடன் படையினர் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்று புலிகள் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டை சிறில் ஹேரத் மறுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-121-08)

மாகும்.

அது மட்டுமல்லாமல் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் பாதுகாப்பு படையினரும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து சந்தித்து மனம்விட்டுப் பேசி விவாதிக்க வேண்டும். அதன்பின் முக்கிய முடிவுகளுக்கு அவர்கள் வரவேண்டும். ஏனெனில் கிழக்கிலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முட்டுக்கட்டையாக உள்ளது என்று அவர் அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்த பின்னர் பெண்ணின் கழுத்தில் கயிறைக் கட்டி இழுத்துச் சென்று கழிவறைக்குள் புதைத்ததாகவும் அவரது நகைகளை விற்று பணத்தை பங்கிட்டுக் கொண்டதாகவும் நீதிபதியிடம் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் உடற்கூற்றியல் நிபுணரின் ஆய்வுக்காக எலும்புக் கூட்டினை கண்டிக்கு அனுப்புமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ச)

## திருத்தம்

கேள்வி அறிவித்தல் - யாழ். வலய கல்வித் திணைக்களத்தின் 21-08-2004 ஆம் திகதி சனிக்கிழமை பத்திரிகை விளம்பரம் தொடர்பாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை கட்டிட வேலை என்பது தவறுதலாக யாழ். இந்து மகளிர் கல்லூரி கட்டிட வேலை என பிரசுரமாகிவிட்டது. இதனை திருத்தி வாசித்துக்கொள்ளவும்.


யாழ். வணிகர் கழகம் நடாத்தும்

மாபெரும் யாழ் வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(C/405)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.